533

533
1-57

REGISTERED No. M. 6165. அஞ. 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 JAN 1957
MADRAS

மாத பத்திரிகை

பிப்ரவரி 1957.

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| தெய்வ இயற்கையோடு மனித விஞ்ஞானப் போட்டி | 1 |
| ஏமாற்றம்! (மாஸ்டர் ஹாரிஸ் பாபு) ... ... | 9 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... | 13 |
| நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும் ... ... ... | 19 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... ... | 23 |
| நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களுடைய வஸிய்யத்து | 28 |
| ...பிய சரித்திரச் சாரம் (... P. மஆலி ஸாஹிபு-பாகவி) ... ... | 30 |

... இஸ்லாம் ஆபீஸ்:
...றரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

3L
[illegible]
N 57
187060

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

---

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


## ஸைதத்துப் படைப்போர் வசன காவியம்

இது ஹஜ்ரத் அமீறுல் மூஃமினீன் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர் சுபியான் என்னும் ஒரு அரசனோடு வெகு சாமர்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்துவை கலியாணஞ் செய்து மதீனத்திற்கு வந்தது முதலிய விஷயங்கள் நிரம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமா இருக்கும். இதைப் பற்றி நிரம்பச் சொல்ல வேண்டிய தில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூசாப் புலவர் அவர்களால் செய்துள்ள செய்யிதத்துப் படைப்போர் என்னும் காவியத்தையே வசன ரூபமாகச் செய்யப்பட்டது.

வசனம் விலை அணா. 12
ஷை பாடல் விலை அணா. 12

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்

பிப்ரவரி—1957.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 1957
MADRAS

## தெய்வ இயற்கையோடு மனித விஞ்ஞானப் போட்டி.

இப்பிரபஞ்சமும் அண்டகோள சராசரங்களும் எப்படி சிருஷ்டிக்கப்பட்டன? எம்முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன? என்ற பரம ரகசியத்தை, எல்லாம் வல்ல சர்வேஸ்வரனாகிய அல்லாஹு தஆலா ஒருவனே அறிய வல்லான்.

மனிதனும் அவ்வாண்டவனுடைய சிருஷ்டிப் பொருள்களில் ஒன்றாகும். மனிதன் அறிவுடையவன்; எதையும் கண்டறிந்து பகுத்துணரும் ஆற்றலுடையவன். ஆயினும் சில சிருஷ்டிகளின் அந்தரங்கத்தைத்தான் மனிதனால் அறிய முடிகிறது. பெரும்பாலான படைப்பினங்களின் பரம ரகசியங்களை மனிதனால் இன்னமும் சரிவர கண்டு பிடிக்கவே முடியவில்லை.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் என்ற நபி, குழந்தையாயிருந்த போது, காட்டுப் பிரதேசத்தில் விடப்பட்டு இயற்கையின்படி வளர்ந்தார்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் சிறு பிள்ளையானவுடன், 'நாம் யார்? நம்மைப் படைத்தவன் யார்? நாம் எதற்குப் பயப்படவேண்டும்? யாருக்குத் தலைவணங்க வேண்டும்?' என்ற ஆராய்ச்சியில் இயற்கையாகவே, யாருடைய போதனையுமின்றி, சுயமே ஈடுபட்டார்கள்.

முதலில் வானவிதானத்தைப் பார்த்தார்கள்; மலை, மடு, நீர்நிலைகளைப் பார்த்தார்கள்; மரஞ் செடி கொடிகளைப் பார்த்தார்கள்; யானைப் புலி சிங்கம் முதலிய மிருகங்களைக் கண்டார்கள்; ஒவ்வொன்றைப் பற்றியும் நெடுநேரம் சிந்தித்துப் பார்த்தார்கள்.

சிருஷ்டிப் பொருள்களின் தன்மைகள் இப்ராஹீம் நபிக்கு, வித விதமாகத் தென்பட்டாலும், அவைகளில் ஸ்திரத்தன்மையோ, மேலோங்கி மிகைத்திருக்கும் தன்மையோ காணப்படவில்லை. யானை பெரிய ஜந்துவாக இருப்பினும் சிங்கத்துக்குப் பயந்துகொண்டு ஓடுவதைக் கண்டார்கள். அந்த சிங்கம் கூட மனிதனைக் கண்டு மிரண்டு ஒதுங்கிச் செல்வதைக் கண்டார்கள். எதைக் கண்டு நாம் அஞ்சுவது எதற்கு நாம் தலை வணங்குவதென்று தெளிவாகப் புலப்படவில்லை நபி அவர்களுக்கு.

'பூமியின் மீது உள்ள வஸ்துக்களெல்லாம் அற்பமானவை. எதையும்நாம் வணங்க வேண்டியதில்லை. எதற்கும் நாம் தலை வணங்க வேண்டியதில்லை' என்று ஓர் முடிவுக்கு வந்து வானத்தை நோக்கிப் பார்த்து ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விட்டார்கள்—சிறுவர் இப்ராஹீம் நபி. மாலை நேரமா யிருந்தது; அன்று பௌர்ணமித் தினமாகவும் இருந்தது; வானவிதானத்திலேயே குளிர் மேக மண்டலங்களும் இல்லை; எனவே முழுவட்ட வடிவமான பூரணச் சந்திரன் மிகப் பிரகாசத்தோடு உதயமாவதைக் கண்டார்கள்; அதன் முழுவடிவத் தோற்றம் அவர்களது கபடமில்லாத உள்ளத்தைக் கவர்ந்தது. எனவே "இது தான் என்னுடைய கடவுள்? இதற்குத்தான் நான் தலை வணங்க வேண்டும்; இது தான் எனக்கு சகாயம் செய்யும்" என்று கருதிப் பணியலானார்கள். அன்றிரவு முழுதும் முழு நிலா ரூபத்தை—சந்திர கோளத்தை மதித்து, சிரம்பணிந்து வணக்கம் செலுத்தினார்கள், இப்ராஹீம் நபி.

மறுநாள் அதிகாலை நேரம்; விடியுமுன் கண் விழித்துப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம். நேற்று மாலையிலிருந்து இரவெல்லாம் தண்ணொளி வீசிக்கொண்டிருந்த பூரணச் சந்திரன் என்னும் வான கோளம் ஒளிமங்கி மறையத் தொடங்கி விட்டது; அதற்குப்பதிலாய் அதன் ஸ்தானத்தில், அதனை விட மிகப் பிரம்மாண்டமான வட்ட வடிவப் பிரகாசப் பொருளாகிய சூரியகோளம் தலைதூக்கி உதயமாகி, உலகுக்கெல்லாம் சுடர் பரப்பத் தொடங்கிவிட்டது. இந்த மகாத்

187060

தீச்சுடர் பிரகாசத்தின் முன் அந்தக் குளிர் ஒளிப் பிரகாசச் சந்திரனுக்கு மகிமையில்லாது போய்விட்டதைக் கண்டார்கள் இப்ராஹீம் நபி அலைஹிஸ்ஸலாம்.

"இல்லை; இரவில் தோன்றி மறைந்தது என்னுடைய இறைவனாக—ரப்பாக—தெய்வமாக இருக்க முடியாது; அப்படி இருந்திருந்தால், இப்போது உதயமாகிப் பிரகாசிக்கும் நெருப்புக் கோளத்தின் முன் நிலைத்து நிற்காமல் மறைந்து போக வேண்டுமென்ற அவசியமில்லை. ஆகவே, இதோ பிரகாசித்துக் கொண்டிருக்கும் சூரிய கோளம் தான் என் ரப்பு; என் கடவுள்; என் எஜமான் என்று எண்ணித் தலை வணங்கலானார்கள்.

இவ்வாறே பகற்பொழுது கழிந்துகொண்டு வந்தது; காலையில் அத்துணை மகாப்பிரகாசத்துடன் சுடர்க்கதிர்களை வீசிக்கொண்டு புறப்பட்டு அஷ்டகாசம் செய்து கொண்டிருந்த அந்தப் பெரிய சூரிய கோளமும், சுடர் தணிந்து ஒளிமங்கி ஜோதிக் குன்றி அந்தங்கெட்டு, நிறம்மாறி செவ்வானத்தில் மத்தியிலே, இரத்த வெள்ளத்தில் புரண்டு மரணமடையும் வீரனைப் போல் மறைந்தொளிந்து கொண்டது; இதையும் ஆராய்ச்சி கண்கொண்டு இப்ராஹீம் நபி (அலை) கண்டார்கள்.

"ஓ! அறிந்தேன். நான் நேற்று கண்டதும் 'ரப்பு' அல்ல; இன்று கண்டு வியந்ததும் 'ரப்பு' அல்ல; எனவே பூமி மீது காணப்படும் மலை, மடு, மரம், செடி, மாடு, மிருகம், யானை, புலி, சிங்கம் யாவும்—இதில் எதுவும் எனது 'ரப்பு' அல்ல; வானத்தில் தோன்றி மறையும் சிறு நட்சத்திரங்களோ, பெரும் சந்திர, சூரிய கோளங்களோ என்னுடைய றப்பு—என்னுடைய தெய்வம்—என்னுடைய எஜமான்—என்னுடைய 'இலாஹ்' அல்லவே அல்ல; ஆனால், பின்னர் யார் என்னுடைய 'ரப்பாக'—இறைவனாக இருக்க வேண்டுமெனின், இந்தப் பூமியையும், அந்த வானத்தையும், இதிலுள்ள பிரபஞ்சப் பொருட்களையும், அதில் இயங்கி மறையும் அண்ட கோளங்களையும் சுயமே படைத்து இயங்க வைத்து, அடக்கியாண்டு கொண்டிருக்கும் பரம்பொருளாய் மறைந்து உறைந்து நிலைத்து நிற்கும் சர்வ சக்தி வாய்ந்தவன் எவனோ, அவனே என்னுடைய ரப்பு, அவனே என்னுடைய இலாஹ், அவனே என்னுடைய எஜமான். அவனையே நான் வணங்க வேண்டும்; அவனையே நான்

அல்லாஹ்வாக, இணை துணையிலாத் தெய்வமாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்று ஹஜ்ரத் இப்ராஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஏக தெய்வத்தை உணர்ந்து தவ்ஹீது செய்து, ஒரே நாயன் என்னும் இயற்கைக் கடவுளை, அல்லாஹ்வின் 'உஜூதை' மனக் கண்ணால் கண்டு தெளிந்து அறிந்து ஈமான் கொண்டார்கள்.

"லா இலாஹ இல்லல்லாஹ் !''

"வணங்குவதற்கு தகுதியான தெய்வம் அல்லாஹ்வைத் தவிர்த்து வேறெதுவு மில்லை'' என்று நிர்ணயங் கொள்ள வேண்டிய முறையையும், நம்பி வணங்க வேண்டிய விதத்தையும், இயற்கையின் ஆராய்ச்சி பிரகாரமே இப்ராஹீம் நபி அவர்கள், உணர்ந்து தீனுல்லாஹ்வை—அல்லாஹ்வின் மதமாகிய இஸ்லாமைத் தெரிந்து அறிந்து கொண்டார்கள்.

அல்லாஹ்வையும் சிருஷ்டிப் பொருட்களாகிய வானம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திர கோளங்கள் முதலியவைகளையும், இப்ராஹீம் நபியவர்கள் ஆராய்ந்து கண்டறிந்து மனம் அடங்கிய முறையானது மேற் கூறியதாகும். அது ஆதிகாலத்தில் இயற்கை படி மனிதன் கண்டறிய முடிந்த சாதாரண வழி. ஆனால், அன்றிலிருந்து பல்லாயிரம் வருஷங்கள் கழிந்து போய், உலகம் செயற்கை முறையில் பல ஆராய்ச்சிகள் செய்து, பல அபூர்வ சக்திகளையும், அரிய சாதனங்களையும் நூதனக் கருவிகளையும், விசித்திர இயந்திரங்களையும் கண்டறிந்து, மிகமிக முன்னேற்ற மடைந்துள்ள இந்நவீன நாகரிக காலத்தில், மனிதன் இறைவனின் மகாத்மியங்களை ஆராய்ந்து தெளியும் முறையோ வேறாய் இருக்கிறது.

"வானம், பூமி, சூரியன், சந்திரன், தாரகைகளை யெல்லாம் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான்; அவன் தான் இறைவன்; அவனே எல்லாம் வல்ல அல்லாஹ்'' என்றால், சைன்ஸ் என்னும் நவீன விஞ்ஞானம் மட்டும் படித்த பேர் வழிகளில் சிலர், அந்த உண்மையையும் ஒப்புக்கொள்ளாமல், நிராகரிக்கின்றனர்.

"வானம் என்பது ஒன்றுமில்லை; அந்த வெட்டவெளி; வெறும் ஆகாயம். அங்கு ஏதும் நிலைத்து நிற்கவில்லை; இயற்கை நியதியின் பிரகாரம் சூரியனை பல கோளங்கள் சுற்றித் திரிந்து கொண்டிருக்கின்றன: பூமியும் அதைச் சுற்றி சுற்றி வந்து தானும் சுழன்று கொண்டிருக்கிறது; சந்திரனும் அதனிடமிருந்தே ஒளி பெற்று, முறைப்படி அளவு

பிரகாரம் பூமியின் மீது வீசிக் கொண்டு செல்கிறது. இன்னும் எத்தனையோ கோளங்களும் கிரஹங்களும் வான மண்டல வீதியிலே முறை போல் இயங்கிச் சென்று அலைந்து கொண்டிருக்கின்றன. அவைகளின் அசைவினாலும், சீதோஷ்ணச் சுடர்களாலும், காலம் என்னும் நேர நிலைமைகள் மாறுவதாலும் தான், உலகில் இரவும் பகலும் உண்டாகின்றன; மழையும் பனியும் பொழிகின்றன; வெய்யீலும் குளிரும் மாறி மாறி வருகின்றன; வசந்தமும் வரட்சியும் வருகின்றன. அவை வீசும் இயற்கை சக்தியினால் தான் நல்லதும் கெட்டதும் உண்டாகின்றன; அவைகளின் சக்தியினால் தான் ஜீவ ஜந்துக்கள் உற்பத்தியாகின்றன; உயிர் வாழ்கின்றன. இறுதியில் மரித்து மறைகின்றன. எல்லாம் இயற்கை நியதியின் பிரகாரமே நிகழ்ப் பெறுகின்றன. எந்த தெய்வமும் எந்த ஒருவனும் இவைகளை ஆட்டி அசைத்து இயங்க வைப்பதில்லை'' என்று நாஸ்திக வாதம் பேசுகின்றனர்-இக்காலத்து விஞ்ஞானிக ளென்னும் சில விதண்டாவாதிகள்.

விஞ்ஞானிக ளென்னும் சைன்ஸ் வாதிகள் எதையும் புதுக் கல்வியின் போக்கின்படியே கவனிக்கின்றனர். அதாவது அவர்களுக்குக் கிடைத்துள்ள ஆற்றல் என்னும் அறிவுத் திறன் அளவுக்கே ஆராய்ந்து பார்க்கின்றனர். முன் ஒரு காலத்தில் இந்த விஞ்ஞானிகள் சொல்லிக் கொண்டிருந்ததை, இப்போதுள்ளவர்கள் சொல்லிவாதிப்பதில்லை; இப்போதுஅதை மாற்றி வேறுவிதமாய் பேசுகின்றனர். உதாரணமாய் பூமி எதையும் தன் பக்கமே இழுத்துக் கொள்ளும் ஒருவித இயற்கை சக்தி உடையதாய் இருக்கிறது, அதன் பெயர் பூகர்ஷண சக்தி என்றும்; வானமும் இவ்விதமாய், குறிப்பிட்டதை தன் பக்கம் இழுத்துக் கொள்ளும் சக்தி உடையதாய் இருக்கிறது; அதன் பெயர் ஆகர்ஷண சக்தி என்றும் கூறினர். அதாவது புகையை வானம் இழுத்துக் கொள்கிறதாம்; மேலே எறியப்படும் கல்லை பூமிகிழே இழுத்துக்கொள்கிறதாம். தண்ணீரில் சிறு கல்லைப் போட்டால் மூழ்கி உள்ளேபோய் விடுகிறது; பெரிய கட்டையை தண்ணீரில் போட்டால் மூழ்காமல் மிதக்கிறது. இதுவும் ஒரு வகை சக்தியாம்.

இவ்வாறே, பூமியை சூழ்ந்து சீதோஷ்ணம் ஓரளவுக்கு கட்டுப் பட்டு இருக்கிறதாம்; இதனால்தான் மனிதன் உயிர் வாழ்கிறானும். பூமியை விட்டுக் கிளம்பும் ஆகாயவிமானம் வானவெளியில் ஒரு குறிப்பிட்ட தொலை தூரத்துக்குமேல் போய்விட்டால் அங்கு காற்று

ஓட்டமே இல்லையாம்; விமான இயந்திரம் வேலை செய்வதில்லையாம்; தொப்பென்று பூமியை நோக்கி விழுகிறதாம்; இல்லாவிட்டால், கீழ்ப்பக்கம் பூகர்ஷணம் என்னும் பூமி இழுப்பு சக்தியாலும், மேல் பக்கம் கிரஹணத்தில் அதாவது ஆகாய அண்ட கோளத்தின் ஆகர்ஷண சக்தியினால் அந்தப் பக்கம் இழுக்கப்பட்டு, மேலும் போகாமல் கீழும் இறங்காமல், நடுவில் சிக்கிப்போய் திரிசங்கு சுவர்க்கம் போல் அந்தரத்தில் தொங்கிவிடுகிறதாம்.

இப்படிப்பட்ட விஞ்ஞான மயமான உலகில், இன்னும் என்னென்னவோ விதமான செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கின்றோம்:

(1) சந்திரமண்டலத்தில் நிறைய பூமி அதாவது மனிதர் வசிப்பதற்கான இடம் இருக்கிறதாம். கூடிய சீக்கிரம் மேனாட்டு விஞ்ஞான மேதாவிகள், அங்கு தாவிப்போய் கொடிநாட்டி இடம் பிடித்து ஆக்ரமித்துக் கொள்ளப் போகிறார்களாம். அப்படி ஆக்ரமிப்பு ஏற்பட்டதும் வசிக்கும் இடங்களை இப்போதே குத்தகைக்கோ, வாடகைக்கோ விடுவதற்கு ஒப்பந்தம் பேசி அச்சாரப் பணம் வாங்குகிறார்களாம்.

(2) ஒரு தேசத்தினர், நூதனமான ராக்கெட் விமானங்களைக் கண்டுபிடித்து விட்டார்கள். அது எத்தகைய பூகர்ஷண—ஆகர்ஷண இழுப்பு சக்திகளையும் மீறிக் கொண்டு, சரேலென்று பாய்ந்துப் போய், செவ்வாய் கிரகத்திலோ, புதன் கிரகத்திலோ 'தொப்' என்று குதித்து விடுமாம்; அல்லது அங்கு போய் அவ்விடங்களை யெல்லாம் போட்டோ பிடித்துக்கொண்டு திரும்பியும் வந்துவிடுமாம்.

(3) இப்போது, மேனாட்டு விஞ்ஞானிகள் வான மண்டலத்திலே, ஆண்டவன் சிருஷ்டித்த சூரியன், சந்திரன், செவ்வாய், சனி போன்ற அண்ட கோளங்களைப்போல் ஒரு இயற்கை 'சந்திரகோளத்'தை தயார் செய்து ஆகாய விமானத்தில், இன்னுஞ் சில நாட்களில் பறக்க விடப் போகிறார்கள். அது தூரம் ஆகாயத்திலேயே சஞ்சரித்துக் கொண்டு, நம்முடைய பூமி சந்திரன் போல் சுற்றிச்சுற்றி வருமாம். அதை இந்தியாவில் கூட கண்ணால்—தூரதிருஷ்டிக் கருவியால் பார்க்க முடியுமாம்.

ஆஹா! என்ன அற்புதம்! என்ன ஆச்சரியம்! எல்லாம் கேட்பதற்கும் படிப்பதற்கும் அபூர்வமாகத்தான் இருக்கின்றன. ஆனால் அனுஷ்டான பூர்வமாய் மேனாட்டார் அதை செய்து காட்டும்போது

தான் இருக்கிறது, அதனல் உலகத்துக்கு நன்மை உண்டாகப் போகிறதா, தீமை உண்டாகப் போகிறதா என்ற விஷயம்.

விஞ்ஞானத்தால் இயக்கப்படும் சில விமானங்கள், மனித (செயற்கை) சக்தியை மீறிக்கொண்டு போய்விடுகின்றன என்ற செய்தியும் பத்திரிகையில் வருகிறது. ஆளில்லாது அனுப்பப்பட்ட 'ராக்கெட்' என்னும் விமானம், ஆகாயத்தில் எங்கோ போய், என்னமோ ஆய்விட்டதாம், அதன் கதிகூட இன்னதென்று அறிய முடியவில்லையாம். அது ஆகாயத்திலே சிக்கிக்கொண்டதா? பூமியிலேயே எங்கேனும் விழுந்து விட்டதா? என்று ரேடியோ, டெலிவிஸன் சக்திகளாலும் அறிய முடியவில்லையாம்.

"வமா ஊத்தீத்தும் மினல் இல்மி இல்லா கலீலா"

"ஏ மனிதர்களே, உங்களுக்கு (விஞ்ஞான)க் கல்வியிலே ஓர் சொற்பமேதான் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்பது குர்ஆன் திருவேதச் சொல்லாகும். இன்று மனிதன், தெய்வ சிருஷ்டியாகிய 'பித்ரத்' என்னும் இயற்கையோடு, விஞ்ஞான மெஷீன் இயந்திர ஆராய்ச்சிகளைக் கொண்டு போட்டி போட்டாலும், அஃதெல்லாம் சர்வசக்தி வாய்ந்த ஏக பரம் பொருளான அல்லாஹு தஆலாவுடைய 'குத்ரத்' என்னும் மகா சக்தியின் முன் ஓர் அற்பப் பகுதியே யாகும். அல்லாஹு தஆலா வுடைய "இல்மு" என்னும் மெஞ்ஞானம் சமுத்திரம் போன்றது. இன்று மேனாட்டு மனிதன் செய்துகாட்டும் சைன்ஸ்—என்ற விஞ்ஞான வித்தை யெல்லாம், அந்த சமுத்திரத்தில் ஒரு துளி அளவே யாகும்.

இதை மனிதன் அறிந்துணர்ந்து கொண்டால்தான், அவனுக்கு மனே அமைதியும் சலாமத்தும் உண்டாகும். இயற்கை சக்தியோடு செயற்கை சக்தி கொண்டு போட்டிப்போட்டு செய்யும் காரியங்களிலெல்லாம் பிறகு அழிவும் நாசமுமே உண்டாகும்.

"இன்னல்லாஹ அலா குல்லி ஷஃயின் கதீர்"

நிச்சயமாக, அல்லாஹ்தான் எல்லா வஸ்துக்களின் (எல்லா சக்திகளின்) மீதும் ஆண்மை பெற்றவனக இருக்கின்றான்." அவனது குத்ரத்தின் அளவை முடிவை அறிய, அற்ப அறிவு பெற்ற மனிதனல் முற்றும் முடியவே முடியாது. அல்லாஹு அக்பர்!

# காஜா முயீனுத்தீன் சிஷ்தி அஜ்மீரி (ரலி) அவர்களின் ஜீவிய சரித்திரம்

இதில் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரலி) அவர்கள் அவதரித்ததும், இளம் வயதிலேயே இபுருஹீம் கந்தூஸி என்னும் மஹானை சந்தித்து அதனால் அவர்கள் மனம் மஃரிபத் ஒளிவால் நிறப்ப மடைந்ததும் பின்னர் காஜா உஸ்மான் ஹாரூனி (ரஹ்) அவர்களிடம் சென்று உபதேசம் பெற்றதும் பின்பு மக்கத்துக்குச் சென்றதும், பின் பக்தாத் ஷரீப் வந்து ஹஸ்ரத் கவ்துல் அஃலம் (கத்த) அவர்கள் சமூகத்தி லிருந்ததும், பஷர்வார் நகருக்குப் போய் ஒரு துர்க்குணமுள்ள கொடியனை நல்வழியிலாக்கினதும், பின்பு பலக் எனும் ஊரில், தஸவ்வுப் என்னும் மெஞ்ஞானத்தில் விசுவாச மில்லாத ஒரு வைத்தியரின் உள்ளத்தில் மஃரிபத் என்னும் மெஞ்ஞான ஒளி பிரகாசிக்க செய்ததும், தீப்பூசகர் களை இஸ்லாத்திலாக்கினதும் காபிரான ஒரு கொள்ளைக் கூட்டத்தை இஸ்லாமைத் தழுவச் செய்ததும், பிறகு மதீனா ஷரீபுக்குப் போய் ஸியாரத்து செய்ததும், அங்கிருந்து நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உத்திரவுபடி அஜ்மீர் வந்ததும், அங்கே நடத்திய கராமத்துகளும், அவர்களின் திருமணமும் அவ்லாதுகளும், அவர்கள் வபாத்தும் விபரிக் கப்பட்டுள்ளன. இம்மஹானின் சரிதையை ஒவ்வொருவரும் வாசித்தறிய வேண்டியது அத்தியாவசியம்.

இதன் விலை அணா. 8

ஷை அறபியில் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அவர்களின் "அதாஹிர் ரஸூல்" என்னும் மௌலூது.

விலை ரூ. 1—4—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# * ஏமாற்றம். *

மாஸ்டர் ஹாரிஸ் பாபு

## (4–வது பகுதி தொடர் கதை)

"ஏன் காரை நிறுத்தினே?" ரஹ்மான் சாயபு கேட்டார்.

"நான் நிறுத்தவில்லே. பெட்ரோல் இல்லாததினுலே அதுவே நின்று விட்டது" டிரைவர் பதிலளித்தான்.

"சரி சீக்கிரம் பெட்ரோலே ஊத்தி காரை 'ஸ்டார்ட்' செய்"

"அவசரத்தில் பெட்ரோல் டின்னை எடுத்துவர மறந்துட்டேன்!" பயந்துகொண்டே கூறினன் டிரைவர்.

ரஹ்மான் சாயபு என்ன செய்வார்? அருகாமையில் 'பெட்ரோல் பங்க்' கும் கிடையாது. காரைவிட்டிறங்கி 'டாக்ஸி'யாகிலும் பஸ்ஸாகிலும் வருகிறதா என்று பார்த்துக்கொண்டு நின்றுர். அவர் போக வேண்டிய திசையிலிருந்து ஒரு டாக்ஸி கார் வந்தது; அவரைத் தாண்டி, கொஞ்சம் தூரம் சென்று அந்த டாக்ஸி நின்றது. அதிலிருந்து அவருடைய மருமகப்பிள்ளை சபியுல்லா இறங்கி வந்தார். அவரைக்கண்டதும், "குழந்தை எப்படி இருக்கான்?" என்று அவசரத்துடன் கேட்டார், ரஹ்மான் சாயபு.

"குழந்தைக்கு என்ன? அவன் நல்லத்தான் இருக்கிறுன். நீங்க எங்கே போக வந்தீங்க" ஸபீயுல்லா கேட்டார்.

"குழந்தை நல்லா இருக்கானு! அப்போ இந்தத் தந்தி யார் கொடுத்தது? இந்தத் தந்தியை பார்த்துட்டுதான் அவசரமாக ஓடி வந்தேன்"

"தந்தியா? நாங்க தந்திகிந்தி எதுவும் கொடுக்கவில்லேயே!"

"சரி போகட்டும். குழந்தை நல்லாதானே இருக்கான். அப்போ வா போகலாம்" என்றுர். பிறகு கார்டிரைவரைப் பார்த்து "நான் போய் பெட்ரோல் அனுப்புகிறேன் பெட்ரோல் வந்தபின் நீ காரை ஓட்டிக்கிட்டுவா" என்று கூறிவிட்டு டாக்ஸியை நோக்கி நடந்தார், ரஹ்மான் சாயபு. சபியுல்லா அவரை பின் தொடர்ந்தார். இருவரும் டாக்ஸியை அடைந்தனர்.

"எங்கே அத்தா போக வந்தீங்க? ஊரிலே கல்யாணம் ஆகிவிட்டதா?" என்று டாக்ஸியில் உட்கார்ந்திருந்த நஜ்மா கேட்டாள்.

"எல்லாம் உன்தம்பிகாரன் செய்த வேலேதான். உம்மஹானி, அவனேக் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிவிட்டா. அதனுல் அவ ளுக்கு கல்யாணமாகும் போது ஏதோ கலாட்டா செய்ய உத்தேசித்து

அது சமயம் நான் அங்கே இல்லாமலிருக்க மெட்ராஸிலிருந்து நீ கொடுக்குற மாதிரி, 'குழந்தை ரொம்ப டேஞ்சரா இருக்கான் உடனே புறப்படு'ன்னு என்க்குத் தந்தி கொடுக்கச் செய்திருக்கிறான். தந்தியைக் கண்டவுடன் கல்யாணத்தையும் பார்க்காமல் அப்பவே புறப்பட்டு வந்தேன். நடுவிலே பெட்ரோல் இல்லாததினால் கார் நின்று விட்டது. நீங்க ரயிலில் வருவதாகச் சொன்னிங்க......"

"ரயில் தவறி விட்டது அதனால் டாக்ஸியில் வந்தோம்" என்றார் சபியுல்லா. பிறகு இருவரும் டாக்ஸியில் ஏறி உட்கார்ந்தனர். டாக்ஸி நகர்ந்தது.

"அவன் அங்கே என்ன கலாட்டா பண்றானே" என்று முணு முணுத்து விட்டு "டிரைவர் கொஞ்சம் வேகமாக ஓட்டுப்பா" என்றார் ரஹ்மான் சாயபு. டாக்ஸி பறந்தது-ஆகாயத்தில் அல்ல; ரோட்டில்.

மாப்பிள்ளையை—ஸலீமை—அவனுடைய சினேகிதர்கள் நன்றாக 'டிரஸ்' செய்தனர். அவர்கள் ஆளுக்கொன்றாக போட்ட மாலைகள், மாப்பிள்ளையின் கழுத்திலிருந்து பாதம்வரை உடலை மறைத்தன.

* * * *

**மா**ப்பிள்ளையின் மீது வெய்யில் படாதவாறு ஒரு சினேகிதன் குடைபிடிக்க மற்ற சினேகிதர்களும், உற்றார் உறவினர்களும் பின் தொடர மஸ்ஜிதை நோக்கிச் சென்றனர்.

"ஜமாத்தார் எல்லோரும் நிக்காகானியுக்கு உத்திரவு கொடுங்கள்" என்றார் ஒருவர். அங்கு கூடிஇருந்த எல்லோரும் "அல்ஹம்து லில்லாஹ்" என்றனர். அதில் ஒரு குரல்மட்டும் "கூடாது" என்றது. எல்லோரும் அந்த சப்தம் வந்ததிக்கை நோக்கினர். ரபீக் எழுந்தான்; கரீம் சொல்லிக்கொடுத்ததை அப்படியே கூறினான். அவன் மட்டும் ஒரு சாதரணமானவரின் மகனாக இருந்திருந்தால், எல்லோரும் அவனுடைய அர்த்தமற்ற பேச்சைக்கேட்டு பரிகசித்திருப்பர்; அவன், லட்சாதிபதியாகிய அப்துர் ரஹ்மான் சாயபுவின் மகன் என்பதினால் எல்லோரும் வாய்அடைத்து போயினர். அதைக் கண்ட மாப்பிள்ளைக்குக் கோபம் பொத்து கொண்டு வந்தது. ஏதோ சொல்ல எழுந்த மாப்பிள்ளையை அமைதியாக இருக்கும்படி கூறிவிட்டு, "நீங்க நிக்கா ஓதுங்க" என்றான் மாப்பிள்ளையின் நண்பன் ஜமீல், காஜி சாயபுவைப் பார்த்து.

'யாருடா அது புதிய 'மேன்'? நான் சொல்லுவது இந்த புதிய மேனின் காதில் விழவில்லைப் போலிருக்கிறது' என்றான் ரபீக்.

"என்ன சொல்கிறே?" ஜமீல் கேட்டான்.

"இவனுக்கு நிக்காஹ் ஓதக்கூடாது!"

"ஏன்?"

"இவன் கட்டிக் கொள்ளபோகும் 'பெண்' என் அத்தைமகள்"

" இருக்கட்டும் "

" நான் அவளுக்கு மாமன் மகன். நான் இருக்கும் போது அவளை வேறுயாரும் கட்டிக்கொள்ளக் கூடாது"

" இது ஆண்டவனிட்ட கட்டளையா? அல்லது அரசாங்கத்தின் சட்டமா?"

" பழைய காலத்திலிருந்து பழக்கத்தி லிருந்துவரும் ஒரு கொள்கை "

" அந்த மூடக்கொள்கைகளுக் கெல்லாம் இந்த இருபதாம் நூற்றுண்டில் இடமில்லை "

" நான் யார் என்பதை இந்த மெட்ராஸ் ரௌடி இன்னும் புரிந்துகொள்ளவில்லை போலிருக்கிறது "

" நீ மூளை இல்லாத முட்டாள் என்பதை நான் எப்போதே தெரிந்துக் கொண்டேன் "

" யாருடா முட்டாள்?" என்று கேட்டுக் கொண்டே ஜமீலைக் குத்த கையை ஓங்கினுன், ரபீக். தன்னை குத்தவந்த கையை இடது கையால் தாங்கிகொண்டு வலது கையால் ஒரு குத்து விட்டான். ஒரு கெஜத்துக்கப்பால் போய் மல்லார்ந்து விழுந்தான் ரபீக்; பிறகு மெள்ள எழுந்து, ஜேபியில் கையைவிட்டு தன் கைத்துப்பாக்கியை எடுத்தான்; அதை ஜமீல் பக்கம் நீட்டி "கையை உயர்த்து!" என்றுன்.

" டேய்! டேய்! என்னடா செய்யுறெ!" என்று கத்திக் கொண்டே மஸ்ஜிதினுள் நுழைந்தார், ரஹ்மான் சாயபு.

தன் தந்தையின் குரலைக் கேட்ட ரபீக், திரும்பினுன். அதே சமயம் ஜமீல் அவன் மீது பாய்ந்தான். எதிர்பாராத விதமாகத் தன் மீது பாய்ந்த ஜமீலை சுட்டான். அவனுடைய எண்ணத்தை ஒருவினுடி முன்னமையே அறிந்து கொண்ட ஜமீல் துப்பாக்கி பிடித்திருந்த அவன் கையை யாருமில்லாதிருந்த பக்கம் திருப்பினுன். ரபீக் சுட்ட துப்பாக்கியின் குண்டு எதிரில் இருந்த சுவற்றில் பாய்ந்தது. மீண்டும் ஒரு முறை சுட்டான் அதுவும் சுவற்றில் மோதியது.

" போலீஸாருக்குத் தகவல் அனுப்பி இருக்கிறேன். அவர்கள் வரும் வரை அவனை அப்படியே பிடித்துக் கொண்டிரு" என்றுர் ரஹ்மான் சாயபு. ரபீக்குடைய இரண்டு கைகளையும், தன்னிரண்டு கைகளால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தான், ஜமீல். போலீஸார் வரும் சமயத்தில் தன் முழு பலத்தையும் போட்டு, திமுறி அவனுடைய பிடியிலிருந்து தன்னை விடுவித்து கொண்டான், ரபீக். "ஆஹ்ஹா ஹா! இனியும் என் துப்பாக்கியின் குண்டிலிருந்து நீ தப்ப மாட்டாய்! உன்னுல் முடியாது!" என்று கொக்கரித்து ஜமீலைச் சுட எத்தனித்தான். அதே சமயம் அவனுக்குப் பின் புறமாக வந்த போலீஸார், அவனுடைய கையிலிருந்த துப்பாக்

கியைத் தட்டி விட்டனர். துப்பாக்கி கீழே விழுந்தது. உடனே பாய்ந்தான், அதை எடுக்க. அதற்குள் அவனை போலீஸார் பிடித்துக் கொண்டனர்.

"இழுத்துச் செல்லுங்கள் இந்த கொலைக்காரனை" என்றார் ரஹ்மான் சாயபு போலீஸாரைப் பார்த்து. போலீஸார் சற்று தயங்கினர். "ஏன் பார்க்கிறீர்? இந்த மாதிரி பிள்ளை இருந்தால் என்ன, இல்லா விட்டாலென்ன. இவன் மீது கொலை செய்ய முயற்சித்த தாக குற்றம் சாட்டி வழக்கு தொடருங்கள். ஒரு ஐந்து வருஷங்க ளாகிலும் ஜெயிலில் இருந்தால் தான் இவனுக்கு புத்தி வரும்." என்றார்.

போலீஸார், ரபீக்கை அழைத்துச் சென்றனர்.

"நிக்கா ஓதி காரியத்தை முடியுங்க. நேரமா யிடுத்து" என்றார் ரஹ்மான் சாயபு.

......எட்டாத பழத்துக்கு கொட்டாவி விட்டு மதி கெட்ட ராஜா மானங் கெட்ட ராஜா.........' என்ற பாட்டின் சப்தம், எங்கோ ஒலி பெருக்கியி லிருந்து கிளம்பி, ரபீகின் காதுகளில் புகுந்து அவன் முகத்தில் அசடு வழிய செய்தது.

(முடிவு)

யாவும் கற்பனை.

---


## மஜ்முஉ முஃஜிஸாத்துர் றஸூல்

இந்த புஸ்தகமாகிறது நமது நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அற்புதங் களாகிய 1011 முஃஜிஸாக்களை ஒழுங்கு திரட்டி "மஜ்மூஉ முஃஜிஸாத்துர் றஸூல்" என்னும் நாமமிட்டு 3 வால்யமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதர நபிமார்களுடைய அற்புதங் களை விட நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்களுடைய முஃஜிஸாத் தென்னும் அற்புதமாகிறது மிகவும் அருமையானது. இதில் 1-வது வால்யம் 395 முஃஜி ஸாத்துகள் அடங்கியன.

கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 2—14—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

## அத்தியாயம் 5.

பூந்தோட்டத்தின் கிழக்குப் பகுதியில் சலவைக்கல் ஆசனத்தில் சிப்கத்துல்லா அமர்ந்திருந்தான்; மற்றவர்களின் பார்வையை விட்டு மறைவாக இருந்தாலும் பூந்தோட்டத்தின் மத்தியில் குழுமி யிருந்த விருந்தாளிகளின் பேச்சைக் கேட்கக்கூடிய நிலையில் இருந்தான். அவன் சிந்தித்தாக வேண்டும்; சீக்கிரம் சிந்தித்தாக வேண்டும். மரியமுக்குத் தெரியும்! ஆனல் மரியம் சொல்ல வில்லை; ஏன் யென சிப்கத்துல்லா யூகித்தான்.

அவளிடம் காதர்கான் எப்போது விஷயத்தைச் சொன்னன்? நிக்காஹ் மஜ்லிஸிலிருந்து (கலியாண மண்டபத்திலிருந்து) வீட்டுக்குத் திரும்பி வரும் வரையில்தான் இன்னன் என்பதை எடுத்துரைத் திருப்பானே? தந்தைக்குத் தகவல் சொல்ல மாட்டாள் அவள். ஏந்திழையாளின் எதிர்காலத்தை எழில் நிறைந்ததாக்கி விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிருர் அவர்! காதர்கான் என்ன சொல்லி யிருப்பான்? விஷயம் முழுவதையும் சொல்லி யிருக்க மாட்டான் என அவன் யூகித்தான். கவர்ச்சி யுள்ள காப்டன் காதிரி எனகனவு கண்டிருந்தவனும் கடிமணம் புரிந்து காதல் வாழ்வு நடத்த விருக்கும் மனிதனும் வேறு என்பதை மட்டுமே அவன் சொல்லி யிருப்பான்.

சிப்கத்துல்லா சிந்தனையிலாழ்ந்திருந்தான். அமைதியாக அமர்ந் திருந்தான் அவன்— அந்த அமைதியை 'மரண அமைதி' என்று கூட சொல்லலாம். சந்தேகம் அல்லது சம்சயமின்றி உண்மை நிலையை ஊகித்து உணர்ந்து கொள்ள வேண்டும்; தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்: காதர்கானுக்கும் காப்டன் காதிரிக்கும் சில அம்சங்களில் ஒற்றுமை காணப்படலாம். அந்தக் கயவனை அவன் ஒரே ஒரு தரம்தான்—அதுவும் தூரத்திலிருந்து—பார்த்திருக்கிருன். எனவே, காப்டன் காதிரி, வேஷம் போட்டு நாடகம் நடிப்பவன் காதர்கான்தான் என்று எவ்வாறு எண்ண முடியும்?

பாவாடை ஓசை கேட்டு, திரும்பிப் பார்த்தான். பட்லர் பஷீருடன் சண்டை பிடித்துக் கொண்டிருந்த சமையல்காரி அந்த வழியே வந்து கொண்டிருந்தாள்.

"புகைப்பட மெடுத்துக் கொள்பர்களுடன் சேர்ந்து கொள்ள விருப்பமா என விசாரிக்கச் சொன்னர் எஜமானர்" என்று தெரிவித் தாள் அவள்.

உடனே அவன் பதிலளிக்க வில்லை. புதியதொரு அக்கரை யுடன், ஆர்வத்துடன், அவனை அவன் கூர்ந்து கவனித்தான்.

"புகைப்பட மெடுத்துக் கொள்வதற்கு நான் விரும்ப வில்லை என்று எஜமானரிடம் சொல்லி விட்டுத் திரும்பி வா"

"திரும்பிவர வேண்டுமா?" அதிசயத்தோடு அவள் கேட்டாள்.

"ஆம், உன்னிடம் உரையாடுவதற்கு விரும்புகிறேன்." புன்னகை ததும்ப சிப்கத்துல்லா கூறினான் "அழையா வீட்டுக்கு நுழையா சம்பந்தி" போல வந்திருந்து மதிக்கப் பெறாமல் மன முடைந்திருக்கும் விருந்தாளி யொருவரின் மீது கருணை கூர்ந்து திரும்பி வந்து திருப்தி செய்வாயாக".

தயக்கத்தோடு நின்றாள் அவள். அவளது முகத்தில் நிச்சய மின்மை நிறைந்திருப்பதை அவன் அறிந்து கொண்டான்.

"கரீமுல்லாகான் சாஹிப், நான் அவ்வாறு செய்வதை விரும்பு வாரா என்பது எனக்குத் தெரியாது" என்றாள் அவள். புன்னகை பூத்து மேலும் சொன்னாள்: "சரி, நான் திரும்பி வருகிறேன்".

பத்து நிமிடமும் கழிந்து விட்டது. புகைப்படம் எடுக்கப் பெற்று, விருந்தினரும் வீட்டுக்குள் சென்று விட்டிருப்பார்கள் என்று எண்ண மிட்டவாறு இருந்து கொண்டிருந்த போது அவள் திரும்பி வந்தாள்.

"உட்கார்" என உபசரித்த வண்ணம், சிகரெட்டைத் தூர எறிந்து விட்டு கல் ஆசனத்தின் கோடிக்கு நகர்ந்தான்

"எனக்காக சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விடாதீர்கள்".

"நீ எவ்வளவு காலமாக இங்கு இருந்து கொண்டிருக்கிறாய்?"

"கரீமுல்லாகான் சாஹிபுடன் எவ்வளவு காலம் இருந்து கொண் டிருக்கிறேன் என்று கேட்கிறீர்களா? சுமார் ஆறு மாதங்களாக......"

"நல்ல வேலை, நல்ல சம்பளம் தானா?"

"ஆமாம், நான் நிம்மதியாக இருக்கிறேன்".

"உனது பெயர் என்ன?"

"எனது பெயர்: ஜீனத்துன்னிஸா. பெயரை ஏன் கேட்கி றீர்கள்?"

"ஜீனத், நீயும் நானும் நன்றாக அறிமுக மாகிக் கொள்ள வேண்டு மென விரும்புகிறேன்" இவ்வாறு இயம்பிக் கொண்டே அவளது கரத்தை மெல்ல பற்றினான்.

அந்தரங்கத்தில் ஆனந்தம் அடைந்த போதிலும், வெளியரங் கத்தில் அதிர்ச்சியுற்றவள் போல காட்டிக் கொண்டாள்.

"நீங்கள் காமாந்தகார மனிதர் என்பது எனக்குத் தெரியாது. சாஹிப், நீங்கள் ஒரு கனவான், கண்ணிய மிகு காப்டன் அல்லவா?"

"ஜீனத், காப்டன் என்பது எனக்கு வழங்கப் பெற்ற கௌரவ விருது. உனது எஜமானி புருஷன் வீட்டுக்குப் போகப் போவதால் நீ மன வாட்ட முற்றிருக்கிறாய் என்று எண்ணுகிறேன்".

"ஆம், அவளை இழந்து நான் தவிப்பேன்"

"அவள் நேர்த்தியான பெண் அல்லவா?"

"அவளுக்கு கணவனாக வாய்ந்திருப்பவரும் மிக நேர்த்தியான மனிதர்"

"நீ அவ்வாறு நினைக்கிறாயா?"

"ஆம், அவர் நல்ல நாணயமான மனிதர் என்று எண்ணு கிறேன். அவரைப் பற்றி அதிகம் தெரியாது"

"பார்வைக்கு நல்லவராகத் தோன்றுகிறா ரல்லவா?"

"அவர் அப்படி இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்"

"மரியம்மீது மிகுந்த பாசம் கொண்டிருக்கிறாரா? அவளை அவர் போற்றிப் பூஜிப்பதாக நான் காண்கின்றேன். ஆரணங்குடன் ஆடவ னொருவன் இம்மாதிரி மிகுந்த காதல் கொண்டிருந்ததை நான் கண்ட தில்லை"

பெருமூச்சு விடாமல் சாமர்த்தியமாக சமாளித்தாள் அவள்.

"ஆம், அவர் அப்படித்தான் என்று எண்ணுகிறேன். எனக்கு அதிக வேலைகள் இருக்கின்றன- ஆகவே, நான் இன்னும் இங்கு இருக்க வேண்டுமா?

"தயவு செய்து ஓடிவிடாதே" மிக மிருதுவான தொனியில் சிப்கத்துல்லா குறிப்பிட்டான். "கலியாணங்கள் எப்போதும் எனக்கு காதல் பரவச மூட்டும்"

விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான் அவன்: "பல்லாண்டுகள் வரை வேறு எந்த மங்கையையும் காப்டன் காதிரி கண்ணெடுத்தும் பார்ப்பார் என்று எதிர் பார்க்கவில்லை. மரியம் மீது அவர் கொண் டிருக்கும் அன்பு அசைக்க முடியாதது; அவள் மீது அவர் ஆழ்ந்த காதல் கொண்டிருக்கிறார்- அழகும் அன்பும் நிறைந்த அணங்கு கிடைத்திருக்கும் பொழுது இனி ஏன் அவர் மற்ற பெண்களை நோக்க வேண்டும்? அவர் கடந்த காலத்தில் காரிகைகள் பலருடன் காம லீலைகள் புரிந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. அக்காரிகைகள் காசுக்கு கற்பை பறி கொடுப்பவர்கள்; ஆகவே, அவர்களை வேண்டும் போது அனுபவிக்கலாம், இல்லாவிடில் நிராகரித்து விடலாம்"

ஜீனத்தின் முகத்தில் முறுவலும் கண்களில் பிரகாசமும் காணப் பட்டது. அவள் சொன்னாள்: "காப்டன் காதிரியைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது"

எழுந்து போக எத்தனித்த அந்த பெண்ணின் கரத்தைப் பற்றி சிப்கத்துல்லா சொன்னான்: "ஜீனத், ஓடிவிடாதே"

"நான் இங்கு இனி இருக்கப் போவதில்லை. காப்டன் காதிரி யைக் குறித்தோ அல்லது வேறு எவரைப் பற்றியோ விவாதிப்ப தற்கு விரும்ப வில்லை. உங்களிடம் நான் பேசிக் கொண்டிருக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால்......"

"தம்பதிகளின் முதல் இரவு பற்றி உன்னிடம் பேசுவதற்கு ஆவலுள்ளவனாக இருக்கிறேன். ரோஜா மலர்கள் பரப்பப் பெற்ற படுக்கையிலே வாசனைத் திரவியங்கள் மணம் கமழ அவர்கள்......... நீ சிந்தித்துப் பார். கடந்த கால வாழ்வையும் காரிகைகளையும் மறந்து மரியமுடன் மகா ஆனந்தமாக அவர் இருந்து கொண்டிருப்பதை எண்ணிப்பார்"

அவனது பிடியினின்று கரத்தை விடுவித்து, எழுந்து நின்றாள் அவள். அவளது முகம் பேய் அறைந்தது போல வெளுத்திருந்தது.

அவளது குரலிலிருந்த கனிவும் குழைவும் போய், கம்பீரமான தொனியில் வினவினாள், "நீங்கள் இவ்வாறு பேசுவதெல்லாம் எதற்காக"?

"உனது விவகாரத்துக்கு நான் வந்து கொண்டிருக்கிறேன். என்னிடமிருந்து ஓடிவிடுவதற்கு நீ முயற்சி செய்தாயானால், உனது குரல்வளையைப் பிடித்துத் திருகி விடுவேன்"

மூச்சு வாங்க முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"ஒரு கனவான் என நீங்கள் நினைக்கப்படுகிறீர்க ளென்பது நினைவிருக்கட்டும்"

"நான் சிறைப் பறவை சிப்கத்துல்லா என கருதப்படுகிறேன். உட்கார். இது என்ன சூழ்ச்சி, ஜீனத்?"

"நீங்கள் எதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை"

"இது என்ன சூழ்ச்சி என்று தான் கேட்கிறேன். உளவறிந்து உண்மை நிலையை உணர்த்திக் கொண்டிருக்க வேண்டு மென்பதற்காக உன்னை காதர்கான் இங்கு இருக்கச் செய்தானல்லவா?"

"காதர்கானை எனக்குத் தெரியாது"

"நீ பொய் சொல்கிறாய். ஜீனத், உன்னை எனக்கு நன்கு தெரியும். காதர்கானுடன் நீ ஓடிவிட வில்லையா? நீ ஒரு அற்பமாது. உன்னை நான் பல தடவை பார்த்திருக்கிறேன். காப்டன் காதிரி யார்?"

"அவரைப் போய்.கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்"

"காப்டன் காதிரி யார் என்று நான் கேட்கிறேன்"

அவளது கரத்தின் மீது அவனது பிடி இறுகியது.

"உங்களுக்குத்தான் தெரிந்திருக்கிறதே. அவர்தான் காதர்கான்"

"இப்போது, கேள். ஜீனத் வந்து உட்கார்." அவளை அவன் விடுவித்தான். விரலைச் சுட்டிக்காட்டி, "காதர்கானிடம் சென்று உளறிக் கொட்டிவிடுவாயாயின், உங்கள் இருவரையும் பிடித்துக் கொடுத்து விடுவேன். நான் எங்கு விரும்புகிறேனோ அந்த இடத்தில் காதர்கானை நான் அங்கு அனுப்பி விடுவேன். நான் இருந்த சிறைச் சாலையில் இப்போது ஒரு நிலவறை காலியாக விருக்கிறது. உனக்கு

விஷயம் விளங்கி விட்டதா? காதர்கான் மீது கருணைகொண்டிருக்கும் காரிகை அல்லவா நீ?"

அவள் பதில் பேசவேயில்லை. "நான் விரும்பும் இடத்துக்கு அவனை அனுப்பி அங்கு அடைத்து விடுவேன். நான் சொல்லுகிறபடி நீ செய்தால் அவனைக் காப்பாற்றலாம்"

"அவர் மீது பழி சுமத்துவதென நீங்கள் தீர்மானித்திருக்கிறீர்களா?" உதடுகளைக் கடித்துக் கொண்டே அவள் கேட்டாள்.

"எனது இளமையில் பழிசுமத்துதல் என்னை எதுவும் செய்ததில்லை. போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ரஜாக்கானைக் கண்டு, விஷயத்தைச் சொல்லிவிடுவேன். நான் சொல்கிறபடி நீ நடந்தால் அவ்வாறு நான் செய்யமாட்டேன்."

"நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்?"

"அவர்கள் எங்கு செல்கிறார்கள்? எங்கு தங்கப் போகிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு விரும்புகிறேன். அவர்களது எதிர்காலத்திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன். தப்பித் தவறி, அவனை நீ மணந்துகொண்டிருக்கிறாயா?"

அவளது முகத்தை நோக்கியபோது அவனது கேள்விக்குப் பதில் கிடைத்தது.

"அவனை நீ மணந்து கொண்டிருக்கவில்லையா? இன்னும் அவனை மணந்து கொள்ளாமலிருக்கலாம். அவன் ஆக்ஞாபிக்கும் ஈனவேலைகளைச் செய்து சலிப்பும் களைப்பும் கொள்ளவில்லையா?"

"ஆம் என்றும் இல்லை யென்றும் பதில் சொல்லலாம். எந்த விதத்திலும் அவருக்கு நீங்கள் இப்போது எதுவும் செய்ய முடியாது. உங்கள் மனதுக்கிசைந்த மரியமை அவர் மணந்துகொண்டு விட்டார். நீங்கள் காட்டிக்கொடுப்பதில் முனைந்தாலும் இன்று காலை அந்த வயோதிகர் செய்ததை உங்களால் இல்லாமலாக்கிவிட முடியாது. உங்களை அவர் மிகைத்து விடுவார்."

"அவருக்கு விஷயம் தெரிந்திருக்குமாயின், ரஜாக் கானுக்கும் அது தெரிந்து விட்டிருக்கும். நான் சொல்வது புரிகிறதா?"

"நீங்கள் என்னதான் செய்யப் போகிறீர்கள்?"

"சிறு தமாஷ் செய்யப் போகிறேன். அது நல்ல தமாஷ். அது இப்போது துவங்கப்போகிறது. கரீமுல்லாகானிடம் சதியை அம்பலப் படுத்திவிடப் போகிறேன், உனது ஆசாமியை அவர் கொலைபுரிந்து விடுவார். காதர்கானிடம் நீ சொல்லிவிட முடியாது. ஏனெனில், வழக்கிற்கு அவசியமான ருஜுக்கள் இருக்கின்றன; எனவே தண்டனை பெற்று சிறையிலிருந்து காதர்கான் வெளியே வரும்போது நீ வயது சென்ற மூதாட்டியாகி விட்டிருப்பாய். எனவே, அது பயன் தரும் செயலல்ல. நீ சொல்லவேண்டியதை யெல்லாம் சொல்லிவிடு; அதுவும் மிக

மெதுவாகச் சொல்; ஏனெனில், எனக்கு சுருக்கெழுத்தில் எழுதத் தெரியாது.”

சட்டைப் பையிலிருந்து சிறு குறிப்புப் புத்தகத்தை எடுத்து, தயங்கிய வண்ணம், தடுமாற்றத்துடன் பீதியுற்றவளாய் அவள் கூறியவை யனைத்தையும் குறித்துக் கொண்டான். இறுதியில் அவன் சொன்னான்: “இப்போது நீ செல்லலாம்” அவள் எழுந்து நின்றாள்; அவளது கண்களில் கோபக் கனல் வீசியது.

“நீங்கள் விஷயத்தை வெளியிட்டு விட்டால், உங்களை நான் கொலைபுரிந்து விடுவேன். இந்த மண ஏற்பாட்டில் நான் அக்கறை காட்டவில்லை. கரீமுல்லாகானின் மீது வஞ்சம் தீர்க்க விரும்பியதால் அவரது மகளை மணந்து கொள்ளுமாறு மகனை கரீம்ஷரீப் தூண்டினார். காதர்கான் என்னிடம் நல்லவிதமாகவே நடந்து வந்திருக்கிறார். காதர்கானை கைது செய்வதற்கு போலீஸார் வரும் அதே தினத்தில் உங்களை நான் சுட்டு வீழ்த்தி விடுவேன். இறைவன் சாக்ஷியாக, இந்த எச்சரிக்கை உங்களுக்கு விடுக்கின்றேன்.”

“அப்படியே செய்; உனது மனம் விரும்பியபடி செய்” என்று சிப்கத்துல்லா சுருக்கமாகச் சொன்னான்.

அவள் மறையும்வரை அங்கேயே இருந்து, பின்னர் எதிர்த் திசையில் அவன் சென்றான். அங்கு கரீமுல்லாகான் பூஞ்செடி மறைவில் திறந்த வெளியில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவரது முகம் புரிந்து கொள்ள முடியாததாக விருந்தது. (தொடரும்)


புதிய இரண்டாம் பதிப்பு

## நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்

(சீறு வசனம்)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல், வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1–8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்லீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 8

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

## (இரண்டாவது பாகம்)

### அத்தியாயம் 3. (தொடர்ச்சி)

### பெண்களின் பெருமை

மனிதர்கள் அவர்கள் சம்பாதிப்பதன் சன்மானத்தைப் பெறுவர்; மாதர்கள் அவர்கள் சம்பாதிப்பதன் சன்மானத்தைப் பெறுவர்.

பெற்ருேரும் நெருங்கிய சுற்றத்தாரும் விட்டுச் செல்வதில் ஆடவர்களுக்குப் பங்கு உண்டு, (அது போல) பெற்ருேரும் நெருங்கிய உறவினர்களும் விட்டுச் செல்வதில் பெண்டிரும் பங்கு பெருவர்.

உங்களில் உழைப்போரின்—அவர் ஆணு யிருந்தாலும் சரி, பெண்ணு யிருந்தாலும் சரி—செயலை நான் வியர்த்த மாக்கி விட மாட்டேன்; உங்களில் ஒருவர் மற்றவரிலிருந்து வெளிப்பட்டவராவார்.

நற்கருமங்களைப் புரிந்து நன்னம்பிக்கை கொண்டோராக எவர் இருப்பினும்—ஆணுயிருந்தாலும் சரி, பெண்ணுயிருந்தாலும் சரி—அவருக்கு நாம் நிச்சயமாக சந்தோஷமான வாழ்வைக் கொடுத்து, அவர் செய்த சிறந்த செயலுக்கு நிச்சயமாக நாம் சன்மானம் வழங்குவோம். எவர் நல்லவினை செய்து நன்னம்பிக்கையுடையவராக இருக்கிருரோ—ஆணுயினும் அல்லது பெண்ணுயினும் சரியே—சுவன லோகத்தில் பிரவேசிப்பார்.

நன்னம்பிக்கை கொண்ட ஆடவரிடம் (வேறு மங்கையரைப் பார்ப்பதினின்றும்) பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் விரதம் அனுஷ்டிக்குமாறும் சொல்வீராக. நன்னம்பிக்கை கொண்ட பெண்டிரிடம் அவர்கள் பார்வையை தாழ்த்திக் கொள்ள வேண்டு மென்றும் விரதம் அனுஷ்டிக்க வேண்டு மென்றும் சொல்வீராக.

மற்ற மாதர்களை மாதர்கள் எள்ளி நகையாடி ஏளனம் செய்யாதிருப்பார்களாக; (எள்ளி நகையாடப்படும்) அவர்கள் ஒரு வேளை (எள்ளி நகையாடும்) அவர்களைவிட நல்லவர்களாக இருக்கலாம். ஒருவரை ஒருவர் மானபங்கப்படுத்தாதீர்கள்; ஒருவரை ஒருவர் இழித்து பழித்துரைக்க வேண்டாம்.

அவர்களுடன் (பெண்களுடன்) அன்பாக நடந்து கொள்ளுங்கள்; ஏனெனில் அவர்களை நீங்கள் வெறுப்பீர்களாயின், அல்லாஹ் அதிக நன்மை குடிகொண்டிருக்கச் செய்யும் ஒரு வஸ்துவை நீங்கள் வெறுக்குமாறு நேரிடலாம்.

## குர்ஆன் ஷரீப்

சிருஷ்டிப் பொருள்கள் அனைத்தையும் எச்சரிப்பவராக இருக்கும் பொருட்டு அவரது அடியாருக்கு அல்புர்கானை அருளிய அவன் தூயவன்.

வானங்கள் பூமியினுடைய அரசாட்சி அவனுடையது. புத்திரர் எவரையும் அவன் பெறவில்லை. அவனது அரசாட்சியில் அவனுக்குத் துணைவர் எவரும் கிடையாது.

எல்லா பொருட்களையும் அவன் சிருஷ்டித்திருக்கிறான்; கட்டளையிடும்பொழுது அவற்றின் கடமைகளையும் நிர்ணயித்திருக்கிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) (முஹம்மதே!) உமக்கு வருத்தமளிக்காதிருப்பதற்காக உமக்கு இந்த குர்ஆன் ஷரீபை நாம் அருளியிருக்கிறோம்.

அஞ்சுபவர் அனைவருக்கும் அது எச்சரிகையாக இருக்கிறது.

பூமியையும் உயரியவானங்களையும் படைத்த அவனது வார்த்தை அது......உம்மை இறைவன் கைவிட்டு விடவுமில்லை; உம்மிடம் அதிருப்தி கொண்டிருக்கவுமில்லை.

கடந்த காலத்தைவிட எதிர்காலம் எழில் நிறைந்ததாக இருக்கும் என்பதை நிச்சயமாக நம்பும். நீர் நிம்மதி யடையக்கூடிய வகையில் உமக்கு உமது இறைவன் சன்மானம் அளிப்பான்.

உம்மை ஒரு அனாதையாகக் கண்டு உமக்கு அவன் ஆதரவு அளிக்கவில்லையா? தவறான வழியில் உம்மைக்கண்டு உமக்கு வழி காட்ட வில்லையா?

உம்மை தேவையுள்ளவராகக் கண்டு உமக்குச் செல்வத்தை அளிக்கவில்லையா? எனவே, எத்தீம் (அனாதை)களை கண்டித்துப் பேசாதீர்; பிச்சைக்காரர்களை விரட்டியடிக்காதீர். உமது இறைவனின் அருட்கொடைகளுக்காக ஸ்தோத்திரம் செய்வீராக.

## மிதமான போக்கு

ஏ! நன்னம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு இறைவன் ஹலால் ஆக்கியுள்ள நல்ல பொருட்களைத் தவிர்த்துக் கொள்ளாமலும் வரம்பு மீறிச் செல்லாமலும் இருங்கள். நிச்சயமாக, வரம்பு கடப்போரை இறைவன் நேசிப்பதில்லை.

## இறைவனின் அருட்கொடைகள்

அவையவைகளின் போக்கிலே சென்று கொண்டிருக்கும் சூரியனையும் சந்திரனையும் உங்களுக்கு அவன் கீழ்படியச் செய்திருக்கிறான்; இரவையும் பகலையும் உங்களுக்குக் கீழ்படியச் செய்துள்ளான்.

அவனிடம் கேட்பவைகள் அனைத்தையும் உங்களுக்கு அவன் அளிக்கிறான்; அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் எண்ணத் துவங்கினால் அவற்றை உங்களால் எண்ண முடியாது; மிக நிச்சயமாக மனிதன் அநியாயக்காரனாகவும் நன்றி கெட்டவனாகவும் இருக்கிறான்.

## முஸ்லிம்கள்

நன்னம்பிக்கை கொண்டவர்களே! இறைவனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் பொறுத்தவரை, கவனமாக இருங்கள்; முஸ்லிம்களாகவே யன்றி மரண மடைய வேண்டாம்.

நீங்கள் நேசிப்பதினின்று தாராளமாகச் செலவு செய்யும்வரை நீங்கள் நற்கதி அடைய முடியாது; நீங்கள் செலவிடுவதை அல்லாஹ் நிச்சயமாக அறிவான்.

நன்மையின் பால் மக்களை அழைத்து நன்மையை ஏவி, தீமை யை விலக்கும் கூட்டம் உங்களிடையே இருக்கவேண்டும்; இவர்கள் தான் நற்கதி யடைவார்கள்.

சமுதாயங்களிலே சாலச் சிறந்தவர்கள் நீங்கள், மனித வர்க்கத் தின் நலனுக்காக நீங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறீர்கள்; நன்மையை ஏவி, தீமையை விலக்குவதோடு, நாயனிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள்

## ஒழுக்க நெறி

விபசாரத்தை விட்டு விலகிக் கொள்ளுங்கள்; அது அருவருப் பான விஷயமாகவும் தீயவழியாகவும் இருக்கிறது.

பூமியின்மீது பெருமையாக நடந்து செல்லாதீர்கள்; ஏனெனில் பூமியைப் பிளந்து செல்லவோ அல்லது கம்பீரத்தில் மலைகளுக்குச் சமமாக இருக்கவோ உங்களால் முடியாது. அல்லாஹ்வின் பார்வை யில் இவ்விஷயங்களெல்லாம் கெட்டவையாகவும் அருவருப் பூட்டுவன வாகவும் இருக்கின்றன.

இறைவனின் திருவதனத்தை நினைத்தவர்களாய், காலையிலும் மாலையிலும் இறைவனைத் தியானிப்பவர்களுடன் பொறுமையை அனுஷ்டியுங்கள், இல்வாழ்வின் ஆடம்பரத்தை நாடி தேடுவதில் அவர்களை விட்டு உங்கள் பார்வை திரும்பாதிருக்குமாகுக, நமது ஞாபகத்தை அலட்சியம் செய்யும் மனோபாவத்தை நாம் உண்டாக்கி யிருப்பவனும் இச்சைகளுக்கு இரையாகுபவனும் உண்மையை உதறித் தள்ளுபவனுமானவனுக்குக் கீழ்படியாதீர்கள்.

வாருங்கள்! உங்கள்மீது உங்கள் இறைவன் கடமையாக்கியுள்ள விஷயங்களை உங்களுக்கு உரைக்கிறேன்: அவனுக்கு இணை துணை கற்பிக்கலாகாது, பெற்றோர்களிடம் நல்லவிதமாக நடந்து, வறுமையின் காரணமாக குழந்தைகளைக் கொலை புரியாதிருங்கள், அவர்களுக்காக

வும் உங்களுக்காகவும் நாம் உணவு அளிப்போம். வெளியரங்கமாகவோ அல்லது அந்தரங்கமாகவோ தீயவழியில் செல்லாதீர்கள், நியாயமான காரணத்துக்காகவன்றி அல்லாஹ் தடுத்துள்ள எதையும் கொன்று விடாதீர்கள், உங்கள்மீது இவைகளை யெல்லாம் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்னும் நோக்கத்துடன் அவன் கடமையாக்கி யிருக்கிறான்.

நன்னம்பிக்கை கொண்டவர்களே! நிச்சயமாக மதுவும், அதிர்ஷ்ட விளையாட்டுகளும், சிலைகளும், அம்புகளை எய்து குறி பார்ப்பதும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்கள். மது, அதிர்ஷ்ட விளையாட்டுகள் மூலம் உங்களிடையே வெறுப்பையும் பிணக்கையும் ஏற்படுத்துவதற்கும் அல்லாஹ்வைப்பற்றிய ஞாபகத்தினின்றும் தொழுகையினின்றும் உங்களை தடுத்து விலக்குவதற்கும் ஷைத்தான் விரும்புகிறான்; எனவே, அவற்றைவிட்டு நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா? இறைவனுக்கு வழிபடுங்கள், அவனது தூதருக்கு கீழ்படியுங்கள், (எப்போதும்) எச்சரிக்கையாக இருங்கள்.

விசுவாசிகளே! உங்களுக்கும் உங்களது பெற்றோர்களுக்கும் பாதகமாக இருந்தாலும் உங்களது உறவினருக்கு விரோதமாக இருந்தாலும் செல்வந்தராக விருந்தாலும் அறிஞராக இருந்தாலும் இறைவன் முன்னிலையில் சாக்ஷி சொல்லும்பொழுது நீதியைக் கடைப் பிடியுங்கள். இறைவன் போதுமானவன், உண்மையினின்று பிறழ்ந்து விடாதிருக்கும் பொருட்டு சாக்ஷியம் சொல்வதில் உங்களுடைய இச்சைகளுக்கு கீழ்படியாதீர்கள்; நீங்கள் சாக்ஷியம் சொன்னாலும் சொல்ல மறுத்து விட்டாலும் நீங்கள் செய்வதை அல்லாஹ் நிச்சயமாக அறிந்திருக்கிறான்.

(தொடரும்)


# உர்து ஸலீஸ் காயிதா

இது உர்து கற்றுக் கொள்வதற்கு சுலபமான பாலர் பாடம். இதில் படங்களைக் கொண்டு இலகுவாய் குழந்தைகள் உர்து வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள புதிய முறையில் போடப்பட்டுள்ளது. இரண்டு கலர்களில் அச்சிடப் பட்டது.

இதன் விலை அணா. 5

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

# திருக் குர்ஆன் : : : : : : : : சார சங்கிரஹம்

## பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### விருத்தாப்பிய ஜக்ரிய்யா நபிக்கு புத்திர பாக்யம்.

"ஏ நபியே! உமது இரக்ஷகனுடைய அந்தப் பூர்வ அருட் பாக்யத்தை (அதாவது)—அவன் தன் அடியாரான (நபியான) ஜக்கரிய்யாவுக்கு அருள் பாலித்ததை பிரஸ்தாபியுங்கள். (அதாவது:) ஜக்கரிய்யா நபி (விருத்தாப்பியத்தின் காரணத்தால்) மிகவும் தள தளத்த (ஈனக்) குரலில், இறைவனிடம் (இவ்வாறு) வேண்டிக் கொண்டார்: "ஏ என் இறைவனே! முதுமையினுல் என் (முதுகு) எலும்பெல்லாம் கோணிப்போய் (பலஹீனமாய்) விட்டன. கிழப் பிராயத்தினுல் (வரட்சியடைந்து) என் தலை, நெருப்பைப் போல் கொதித்துக் கொண்டிருக்கிறது. ஏ எனது இறைவனே! நான் (பணிந்துப்) பிரார்த்தனை (இபாதத்) செய்வதில், நான் உன்னுடைய திருச் சமுகத்தை விட்டு ஒதுங்கி யிருந்தவனல்ல; (அங்ஙன மிருந் தும்) எனக்குப் பிறகு, என்னுடைய ஸ்தானத்துக் குரியவர்களை (என் சகோதரர்களைப் பற்றி) பயப்பட வேண்டியவனு யிருக்கிறேன். (ஏனெ னின் எனக்குப் பிறகு அவர்கள் உலகில் சன்மார்க்கம் பரத்த இஷ்ட மில்லாது, சீர்கெட்டுப் போய்விடலாம்; ஆகவே நான் புத்திர சந்தானம் வேண்டுகிறேன்:) என்னுடைய மனைவியோ மலடுதட்டிப் போனுள். (அவளால், கிழவனுகிய எனக்குப் பிள்ளை எப்படி உண்டாகும்?) எனவே (எவ்வாற்ருலும்) நீ உன் பேரருளின் மகிமை கொண்டு எனக் கொரு பிரதிநிதியை—ஓர் ஆண் மகனை—கொடுத்தருள்வாயாக. அவன் எனக்குப் பிதுராக (வாரிஸாக)வும் இருக்கட்டும்; (நபி) யாகூப் உடைய வம்ச வழிக்கும் வாரிஸாக இருக்கட்டும். இன்னும் என் இறை வனே! (அப்படி எனக்கு உண்டாகப் போகும்) அந்தப் பிள்ளையை, (பாமர ஜனங்களில்) மிக ஒப்புக் கொள்ளப்பட்டவனுகச் செய்வாயாக" என்று (பிரார்த்தித்து உருக்கமாய்) வேண்டிக் கொண்டார்.

(அப்பிரார்த்தனைக்கு, இறைவன் அளித்த பதில் மொழியா வது:—) "ஏ ஜக்கரிய்யாவே! யாம் உமக்கு (எமதருளால்), ஒரு ஆண் மகவு பிறப்பான் என்னும் சுபச் செய்தியை அளிக்கின்ருேம்; அந்தப் பிள்ளைக்கு 'யஹ்யா' என்று பெயரிடுவீராக. இதற்கு முன் யாம் இந்தப் பெயருடைய எந்த மனிதனையும் (உலகில்) சிருஷ்டித்த தில்லை" என்று செய்தி யாம் அறிவித்தோம்.

அதற்கு ஜக்கரிய்யா (நபி), "ஏ எனது இர்க்ஷகனே! எனக்கு எப்படி (பிள்ளை) பிறக்க முடியும்? ஏனென்ருல், என்னுடைய மனை

வியோ மலடியாகி விட்டாளே! மேலும் நான் என்னுடைய விருத்தி யாப்பியத்தின் காரணத்தால் (துவண்டு) பலஹீனனாகி விட்டேனே," என்று குறை இறைந்து கொண்டார். அதற்கு ஆண்டவன், "(ஜக்ரிய்யாவே)! அவ்வாறே (பிள்ளைப்பேறு) உண்டாகும். உமது இரக்ஷகனாகிய நாம், உமக்கு அளிக்கும் உறுதி மொழியாவது: உமக்கு இந்த வயதிலும் ஆண் மகனை அளிப்பது (இறைவனாகிய) எமக்கு மிகவும் எளிதான காரியமேயாகும். இதற்கு முன், நீவிர் ஒன்றுமில்லாதிருக்க, உம்மை யாம் (அற்புதத்தால்) சிருஷ்டித்து வைத்தோ மல்லவா?" என்று ஆறுதல் பகன்றான் இறைவன். (ஸூரா: மர்யம்; ருகூ: 1.)

## யஹ்யா (அலை) வுக்கு பால்யத்திலேயே நபிப்பட்டம்.

(ஹஜ்ரத் ஜக்ரிய்யாவுடைய பிரார்த்தனையின் பயனாக, யஹ்யா பிறந்து வளரும்போது இறைவன், அவருக்கு கட்டளை யிட்டதாவது:—) ஏ எஹ்யாவே! இதோ இந்த (வேத) புத்தகத்தை பற்றிப் பிடித்து ஒழுகிக் கொள்வீராக," (என்று இறைவன், அவருக்கு அருளினான்.) மேலும், அவர் சிறு பையனாக இருந்த போதே, (இறைவனாகிய)யாம், எமது பேரருள் பாக்யத்தால், அவருக்கு நபித்துவத்தையும், அன்பையும் பரிசுத்த உள்ளத்தையும், (பக்தி) வாழ்க்கைத் தூய்மையையும் அருள் புரிந்தோம். எனவே அவர், தம்முடைய தாய்—தந்தை (ஜக்ரிய்யா தம்பதியுடன்) புண்ணியமான காரியங்களிலேயே (சதா) உடந்தையாக இருந்து வந்தார்; ஒரு போதும் அவர் மாறுபாடு செய்ய வில்லை. எனவே, அவர் பிறந்தாரோ அந்த நாளின் மீது சாந்தி உண்டாகட்டும். எந்த நாளில் அவர் மரிப்பாரோ அந்த நாளின் மீதும், எந்த நாளில் (கியாமத்தில்) அவர் மீண்டும் உயிர் பெற்றெழுவாரோ அந்த நாளின் மீதும், (சாந்தி உண்டாகட்டும்.) (ஸூரா: மர்யம்; ருகூ 1.)

## மண மாகாத பீவி மர்யம் வயிற்றில் ஹஜ்ரத் ஈஸா பிறந்த வரலாறு:

(ஏ முஹம்மத்) நபியே, குர்ஆனில் மர்யமைப் பற்றிய பிரஸ்தாபம் இருக்கிறது. (இதை விளக்கமாய், முஸ்லிம் ஜனங்களுக்கு எடுத்தோதுவீராக. அதாவது):—அப்போது அவர். (பால்யை மர்யம்), தம்முடைய ஜனங்களை யெல்லாம் (ஒதுக்கி) விட்டுப் போட்டு, தனியாக (பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலின்) கிழக்குப் பகுதியில் ஓரிடத்தில் (ஒதுக்கமாய் போய்) உட்கார்ந்து கொண்டார். மேலும், ஜனங்களுடைய புறத்தால் (அவர்கள் யாரும் தன்னைப் பார்க்கா திருக்க) திரையும் போட்டுக் கொண்டார். (அப்படிப்பட்ட) அந்த சமயத்தில், (இறைவனாகிய) யாம், எமது ஆவியை (ஜிப்ரீல் தூதரை) அப்பெண்மணியின் பால் அனுப்பி வைத்தோம். அவர் முழு மனித ரூபத்தில், அவள் எதிரில் தோற்றமளித்து வந்து நின்றார்.

(திரைச்குள் மீறி ஓர் புருஷன் வந்து விட்டதைக் கண்ட) மர்யம் (திடுக்கிட்டு, அவரை நோக்கிச்) சொல்லலானார்: "(நீர் இங்கு ஏன் வந்தீர்,) நீர் ஒழுக்க சீலராயின் (இவ்விடத்தை விட்டும்) போய் விடுவீராக; (எனவே) யான், உம்மைவிட்டும் (பாதுகாக்கும்படி) இறைவனிடம் காவல் தேடுகிறேன். இதற்கு (வானவரான) ஜிப்ரீல் "நான் (மனிதனல்ல;) ஆண்டவனால் அனுப்பிவைக்கப்பட்ட தேவ தூதன், (மலக்கு); நான் உனக்கு ஒரு பரிசுத்த குணசீலமுள்ள ஆண் மகனை (பிறக்கப் போகிறான் என்பதைப்) பற்றிய (செய்தியை) அளிக்கவே வந்துள்ளேன்" என்று (சமிக்ஞையாகக்) கூறினார். இதைக் கேட்டு (வியப்புற்ற கன்னி) மர்யம், சொல்லலானார்: "என்னிலிருந்து (என் வயிற்றி லிருந்து) ஆண்பிள்ளை எங்ஙனம் ஜனித்தல் சாத்திய மாகும்? நானோ, எந்தப் புருஷனாலும் (இச்சையால்) தீண்டப்படாத (தூயவளாய்) இருக்கின்றேனே. மேலும் நான், (ஒழுக்கந்தவறிய) துஷ்கிருத்தியைக் காரியுமல்லவே" என்பதாகும். அதற்கு (தூதர்) ஜிப்ரயீல் சொன்னதாவது:—"(நான் எப்படிச் சொல்கிறேனோ) அப்படியேதான் நிகழப் போகிறது. இது (சர்வ சக்தியுள்ள) உன்னுடைய இரக்ஷகனின் கட்டளையாகும். (அவன்இடும் கட்டளையாவது: இறைவனாகிய) எமக்கு இந்தக்காரியம் (தந்தையில்லாமல்-ஆண் சேர்க்கையில்லாமல், பிள்ளை பிறக்கவைப்பது) மிகவும் இலேசானதே (சாத்தியமானதே)யாகும். (இறைவனாகிய) யாம், அந்த ஆண் பிள்ளையை, லோக மக்களுக்கு ஓர் அற்புதமாக (முஃஜிஸாவாக) வும், எம்முடைய (ரஹ்மத்) பேரருளின் அத்தாக்ஷியாகவும் ஆக்கி வைக்கப் போகிறேன். (இங்ஙனம்) அவர் பிறக்கும் விஷயமானது (அதாவது, தாய்-தந்தையின்றி ஆதம் பிறந்ததைப் போல், தந்தை மட்டு மின்றி ஈஸா பிறப்பது) ஆதியிலேயே முடிவு செய்யப்பட்டுப் போனவிஷயமாகும்:-" என்பதாகும்.

(இவ்வாறு வானவர் ஜிப்ரீல், சுபச் செய்தி கூறிச் சென்றபின்) அவ்வாறே, (பீபி) மர்யமுக்கு (ஸ்வயம்பாகவே), ஆண்பிள்ளை பிறப்பதற்கு அறிகுறியாக, கர்ப்பம் தரித்துவிட்டது. அவர், (தூய மர்யம் குமாரனை)கர்ப்பத்தில் தாங்கிக்கொண்டு,(ஊராரின் அவச்சொல்லுக்கு பயந்து ஒதுங்கி) எங்கோ தூரமான இடத்துக்குப் போய், ஒதுக்கமாய் உட்கார்ந்து விட்டார். பிறகு பிரசவ வேதனை ஏற்பட்டபோது, (யாரும் உடன் துணை யில்லாமல்) வலியைத் தாங்கிக் கொண்டு, ஒரு பேரீச்ச மரத்தடியில் போய் அமர்ந்து கொண்டார். அப்போது (மனம்வருந்தி, ஊரார் பழிசுமத்துவரே என்று நெக்குருகி) "அந்தோ! நான் இதற்கு முன்னரே, இறந்துபோய் விட்டிருக்கக் கூடாதா? (அப்படி இறந்திருந்தால், உலகத்தாரிடம்) நான் மறந்து போன விஷயமாய் மாறியிருப்பேனே!" என்று பிரலாபித்து, (தாகத்தால் நா வரண்டு துடித்து)க் கொண்டிருந்தார். அப்போது, (தெய்வீகச் செயலாய்) அவர் அமர்ந்திருந்த மண்ணுக் கடியில், ஒரு நீர் ஊற்று உண்டாகி,

87060.

அதிலிருந்து (இவ்வாறு)சப்தமும் ஒலித்தது:(அதாவது "மர்யமே,) நீ (தாகத்தால்) வருந்த வேண்டாம். உன்னுடைய (அருளாளனுகிய) இறைவன், உன் இருப்பிடத்தின் கீழே, (காலடியில்) ஒரு நீர் ஊற்றை, உண்டாக்கி ஒலிக்கச் செய்துள்ளான். (அதில் பருகி தாகந் தீர்த்துக்கொள்: பசியெடுத்தால்) அந்த ஈத்த மரத்தின் கிளையை (தொங்கும் மட்டையை) பிடித்து உன் பக்கம் உலுக்கு. அது உன் மேல், நன்கு பழுத்த (இனிய) பழங்களை உதிர்க்கும். எனவே (அதை) உண்பாயாக. (நீரைப்)பருகுவாயாக. (நீ மரிக்காமல் ஜீவித்து) இருந்து, (உன் பிறக்கும்) மகனைக் கண்டு உன்கண்களை குளிர்ச்சியாகச் செய்து கொள்வாயாக. இப்போது, யாரேனும் மனிதர் (வந்து) உன்னைப் பார்த்து (உன்னிடம் ஏதேனும் கேட்டு) நின்றால், (அவர்களை நோக்கி, பேசாமல், கை சமிக்ஞையாக) "நான் அருளாளனுகிய இறைவனுக்கு நோன்பு (விரதம்) நோற்றுக் கொண்டிருக்கிறேன்; இன்று நான் யாருடன் பேச முடியாதவளா யிருக்கிறேன்." என்று சொல்லி விடுவீராக" என்பதாகும். (அந்தக் காலத்து ஷரீஅத்தின் பிரகாரம், நோன்பு நோர்ப்பவர் பேசுவது ஹராமாக இருந்தது; உண்ணுவிரதத்தோடு மௌன விரதமும் அனுஷ்டிக்க வேண்டும்.)

அதன் பிறகு மர்யம் (ஏகாந்தத்தில், பிறந்த) ஆண் குழந்தையை மடியில் தூக்கிக் கொண்டு, (தன்னுடைய இனபந்து) ஜனங்களுடைய சகவாஸத்தில் போனர். (கன்னியா யிருந்த) மர்யமின் மடியில் பிள்ளையைப் பார்த்ததும்; (அந்த அதம ஜனங்கள்) "ஏ மர்யமே, நீ (மிகவும்) தகாத கெட்ட காரியத்தை செய்து விட்டாய்; (உன் செயலை என்ன வென்று சொல்வது?) நீ ஹாரூனுடைய தங்கை யாயிற்றே; உன்னுடைய தகப்பனர் (ஒழுக்கங்) கெட்ட மனிதனுக இருக்க வில்லையே; மேலும் உன்னுடைய தாயாரும் கெட்ட நடத்தை யுள்ளவளாக இருக்கவில்லையே; (நீ மாத்திரம் எப்படி கெட்டுப் போய், பிள்ளையை பெற்றுக் கொண்டாய்?)" என்று (கடிந்து இழிமொழி) கூறினர்கள்.

அதற்கு (தூய உத்தமி) மர்யம், (வாய் திறந்து ஏதும் பேசாமல்) தன் ஆண் பிள்ளையின் பக்கம் கையைக் காட்டினர்: (அதாவது: "ஏதேனும் கேட்டுத் தெரிய வேண்டுமானல், இந்த சிசுவையே கேளுங்கள், பதில் சொல்லும், என்பது அதன் கருத்து.) ஜனங்கள் இதை அறிந்து "என்ன? தொட்டிலில் தவழும் இந்த (பச்சை)க் குழந்தையிடமா, நாங்கள் (கேட்டு) சம்பாஷணை புரிய வேண்டும்? (எங்களைப் பரிகாசமா செய்கிறுய்?") என்று அவர்கள் (ஆத்திரமாய்) கூறியதும், அந்த (பசுங்) குழந்தை, இவ்வாறு (வியக்தமாய்) பேசத் தொடங்கியது :—(ஏ அறியாதவர்களே) "நான் அல்லாஹ்வுடைய அடியானுக தோன்றி இருக்கின்றேன்; அவனே எனக்கு (பைபிள்) வேதமும் அருள் புரிந்திருக்கிருன்; மேலும் அவன் என்னை திருத்தூதாக

(நபியாக)வுமாக்கி அனுப்பி யிருக்கிறான். நான் எங்கிருந்த போதிலும் என் மீது, பரக்கத் (என்னும் ஆசீர்வாதம்) பொழிந்திருக்கிறான். மேலும் அவன் எனக்கு கட்டளை பிறப்பித்து, நான் உயிருடன் (ஜீவித்து) இருக்கும் கால மெல்லாம், தொழுகை நிறைவேற்றவும், ஜக்காத் (பொருள் தானம்) செய்யவும், இன்னும் என் (தூய) அன்னைக்கு வழிப்பட்டு நடந்து கொள்ளவும் எனக்கு போதனை செய்துள்ளான். மேலும் (என்னுடைய கர்த்தா) என்னை, அநியாயக்காரனாகவோ ஒழுக்கங் கெட்டவனாகவோ செய்யா திருக்கிறான்; (இதற்கு அனவரதமும் நன்றி செலுத்துகிறேன்) நான் பிறந்துள்ளேனே அந்த நாள் மீது சாந்தி உண்டாகட்டும். எந்த நாளில் நான் மரிப்பேனோ, எந்த நாளில் நான் மீண்டும் (கியாமத்தின் போது) உயிர் பெற்றெழுவேனோ, அந்த நாளின் மீதும் (சாந்தி உண்டாகட்டும்)" என்று குழந்தை பதில் சொல்லியது.

"ஏ (முஹம்மத்) நபியே, இது தான் மர்யமின் மகனான ஈஸாவைப் பற்றிய உண்மையான (சத்திய) விருத்தாந்தம்; (உண்மையை உணரும் அறிவிலாத) ஜனங்கள், இதைப் பற்றி (தாறுமாறாக) விவாதம் செய்து கொண்டுழல்கின்றனர். (அந்தோ!) (ஸூரா: மர்யம்; ருகூஃ-2.)


# அறபு த:லீமுல் புர்கான் பீ
# எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள, புதிய முறையில் எழுதி யுள்ள அறபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தைக் குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற ஆசிரியர்களுக்கு குறிப்பும் அறபுத் தமிழில் போடப் பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக் செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது. இரண்டு பாகங்களும் சேர்ந்தது.

விலை அணா. 6

எஸ்ஸர்னல் குர்ஆன் லாகூர் ஸ்டைல்

பெரியது — விலை அணா. 10

ஷை சிறியது — விலை அணா. 6

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

இதைப் படித்து ஒவ்வொரு முஸ்லிமுக்கும் தெரியப்படுத்துங்கள்

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி

# நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களுடைய வஸிய்யத்து.

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி, அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் வல் ஆகிபது லில்முத்தக்கீன், வஸ்ஸலாத்து, வஸ்ஸலாமு அலா ஸெய்யிதினா முஹம்மதின், வ ஆலிஹி, வஅஸ்ஹாபிஹி வஸல்லம்.

தரூத் பாத்திஹாவுக்குப் பிறகு இந்த வஸிய்யத்து நாமாவை, மதீனா முனவ்வராவில் உள்ள ஷெய்கு அஹ்மது காதிம் சொல்கிறார்கள்:—வியாழக்கிழமை யன்று ரவ்லா ஷரீபில் குர்ஆன் ஷரீபு ஓதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்கு நித்திரை வந்து விட்டது. என்னுடைய மனதில் நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களின் நூர் என்னும் ஒளிவைக் கண்டேன். அவர்கள் சொன்னார்கள்: "ஓ ஷெய்கு அஹ்மதே! நான் அல்லாஹ்வின் சமூகத்தில் மிகவும் வெட்கப் பட்டவனாக இருக்கிறேன். ஏனென்றால் என்னுடைய உம்மத்தோர்கள் நற்கருமம் செய்வதில்லை. எந்த நேரமும் தன் நோக்கப்படி பாவச் செயல்களையே செய்து கொண்டிருக்கிறார்கள். இக்காரணத்தினாலேயே, கிருபை பொருந்திய அல்லாஹ்விடத்தும் இன்னும் மலாயிகத்துமார்களிடத்தும் முகம் காட்ட முடியவில்லை. ஒரு வியாழக் கிழமையிலிருந்து மறு வியாழக்கிழமை வரையிலும் ஒரு லக்ஷத்து அறுபதினாயிரம் ஈமானுள்ள மனிதர்கள் பாவத்திலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். இன்னும் நற்செயல்களைக் கவனிப்பதே கிடையாது. எந்நேரமும் வாக்கும் மனமும் ஒத்து கெட்ட வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். கள்குடி, புறம்பேசுதல், கோள் சொல்லல், அல்லாஹ்வின் ஏவலைத் தட்டி நடத்தல், பொய் சொல்லுதல் முதலிய கெட்ட காரியங்களையே செய்கிறார்கள். ஹராமான—விலக்கப் பட்ட சொத்தை தின்கிறார்கள். நன்மை செய்கிறதில்லை, நோன்பு வைப்பதில்லை; ஜக்காத்து கொடுப்பதில்லை, தொழுகிறதில்லை. இக் காரணங்களை முன்னிட்டு, ஷெய்கு அஹ்மதே! நீர் அல்லாஹ்வின் மீது தவக்கல் வைத்து இந்த வஸியத்து நாமாவை எனது உம்மத் தோர்கள் பாவச் செயல்களை விட்டு நீங்கும் பொருட்டு ஒவ்வொரு ஊருக்கும் அனுப்பி வைப்பீராக. அவர்களுடைய கெட்ட நடவடிக் கைகளினால் நான் மிகவும் வெட்கப்படுகிறேன். இன்னும் அவர்களின்

மீது வித விதமான வேதனை அடையாளங்களை அல்லாஹு தஆலா அனுப்பி கொண்டிருக்கிறுன். தௌபாவின் வாசல் அடை பட்டுவிடும். ஓ ஷெய்கு அஹ்மதே! என்னுடைய உம்மத்தோர் களுக்கு சொல்லிவிடும். அல்லாஹ்வினிடத்தில் பிழை பொறுக்கத் தேடுகிறேன். இக்காலத்து ஜனங்கள் நிரம்ப மறதி கேடர்களாய் இருக்கிறுர்கள். தீனுல் இஸ்லாமில் இருந்து கொண்டு அகம்பாவமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறுர்கள். காலம் நெருங்கிக் கொண்டு வரு கிறது அதாவது, (ஹிஜ்ரீ பதிமூன்றும் நூற்றுண்டிலே) பெண்கள் தங்களது கணவர்களை பொருட்படுத்தாது தன் இஷ்டப்படி வேலை களைச் செய்ய ஆரம்பிப்பார்கள். தனது கணவரின் உத்தரவின்றி எங்கு விரும்புகிறுர்களோ அங்கு செல்வார்கள். ஒரு நக்ஷத்திரம் வானத்தில் உதயமாகும். அது பகலில் தெளிவாகத் தெரியும். பிறகு மேற்கு திசையில் பொழுது உதயமாகும். பின் தௌபாவின் வாசல் அடைபட்டு விடும். இதற்காக வேண்டி, இது கடைசி வேலை யாக இருக்கிறது. நான் அல்லாஹ்விடத்தில் கார்மானம் தேடு கிறேன். ஓ ஷெய்கு அஹ்மதே! என்னுடைய இந்தக் கடைசி வஸிய்யத்து நாமாவை அனுப்பி வைத்து விடும். இது அல்லாஹ் வின் நன்கொடையாக யிருக்கும். எவர் ஒருவர் இந்த வஸிய்யத்து நாமாவை மொழி பெயர்த்து, ஒரு ஊரிலிருந்து மறு ஊருக்கு அனுப்பி வைக்கிறுரோ, அவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் வெகுமதி இருக்கிறது. இதற்காக கிருபையுள்ள ஆண்டவன் நன்மையையும், மேலான கூலியையும், சுவர்க்க லோகத்தில் மாளிகையையும் தந்தருள் வான். எவரொருவர் இந்த நாமாவை ஒரு ஊரிலிருந்து மறு ஊருக்கு அனுப்பவில்லையோ அவருக்கு என்னுடைய (ஷபாஅத்து) மன்றுட் டம் கிடைக்கப்பட மாட்டாது. எவரொருவருக்கு எழுதத் தெரியா தோ, அவர் மற்றவர்களைக் கொண்டு எழுதி அனுப்ப வேண்டியது. எவரொருவர் அப்படி அனுப்ப வில்லையோ அவன் பாவியாவான்; எவர் அனுப்பி வைக்கிறுரோ அவருடைய பாவங்கள் பொறுக்கப்படும். அவருடைய பெற்றோரின் பாவங்களும் பொறுக்கப்படும். ஏழை யானவன் எழுதினுல் தனவந்தனுவான்; கடன்காரனுயிருப்பவன் எழுதினுல் கடன்களினின்று நிவர்த்திக்கப்படுவான். எவன் எழுதா மல் நிராகரிப்பானே, அவனுடைய முகம் கருத்து விடும்.

ஷெய்கு அஹ்மதாகிய நான் என்னுடைய ஈமானின் பேரில் உறு தியாகச் சொல்லுகிறேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக, அல்லாஹ் வின் மீது சத்தியமாக அல்லாஹ்வின் மீது சத்தியமாக இந்த வஸிய் யத்து நாமா உண்மையானதாகும். எங்கிலும் பொய்யானுல் அல் லாஹு தஆலா என்னை காபிராக்கி மவ்த்தாக்கி விடுவான். வஸ்ஸலாம்.

நாயகம் ரஸூல் (ஸல்) அவர்கள் மீதும் அவர்கள் கிளையார்கள் ஸஹாபாக்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாகுக. ஆமீன்!

# இஸ்லாமிய சரித்திரச் சாரம்.

## ஹிஜ்ரீ 51–லிருந்து 100–வரை.

(டி. எப் ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

### ஹிஜ்ரீ-87.

(1) வலீத் பின் அப்துல் மலிக் என்ற புதிய கலீபா, மதீனா முனவ்வராவில், மஸ்ஜிதே நபவீ என்னும் திருப்பள்ளியை விஸ்தீரணப்படுத்துவதற்காக திட்டம் போட்டு வேலையை ஆரம்பித்தார். எனவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பத்தினிமார்களின் பெயரால் இருந்து வந்த 'ஹுஜ்ரா' என்னும் விடுதிகளையும் இடித்து, ரவ்லயே அக்தஸ் என்னும் பூங்காவில் சேர்த்துக் கொண்டு, இவை எல்லாவற்றையும் எல்லையாக சூழ்ந்து ஒரு மதில் சுவர் எழுப்பினர்.

இத்துடன், மேற்படி கலீபா வலீத், திருமக்காவிலுள்ள கஃபா ஷரீபின் பிராகார எல்லைகளையும் விஸ்தீரணமும் வனப்பும் உடையதாகச் செய்வதற்கு, ஆவன காரியங்களைச் செய்யலானர்.

இது மட்டுமல்ல: இந்த கலீபா, தமிஷ்க் நகரத்தில் சூன்யமாய்க் கிடந்த 'ஸைன்ட் ஜான்' என்ற கிறிஸ்துவக் கோவிலை இடித்து, அதன் ஸ்தானத்தில் அழகான பெரிய மஸ்ஜித்-பள்ளிவாசலை கட்டி வைத்து, இஸ்லாத்துக்குப் பேரூழியம் புரிந்தார்.

(2) கலிபா வலீதுடைய படைத் தளபதியான ஸல்மா என்பார், இவ்வாண்டு எஷியா கோசக் என்னும் கிழக்கு நாட்டுப் பிரதேசத்தில் படை யெடுத்துச் சென்று, கெய்ஸர் என்ற கிறிஸ்துவ மன்னரை தோற்கடிக்கச் செய்தார். மேலும், அந்த ஊரையும் பிடித்து, இஸ்லாமியக் கொடியை நாட்டினர்.

### ஹிஜ்ரீ-88.

(1) சேனதிபதி ஸல்மாவுடைய வாலிபக் குமாரரும் மகா வீர தீர பராக்கிரம சாலியுமாகிய குத்பிய்யா என்பார், குராஸன் பிரதேசத்துக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்; அப்போதே இவர், ஜீஹூன் எல்லையைக் கடந்து சென்று துர்க்கிஸ்தான் மீது படை யெடுத்துத் தாக்கி, ஸமர்கந்து, புகாரா முதலிய நகரங்களைப் பிடித்து ஆங்கெல்லாம் இஸ்லாமியக் கொடியை நாட்டினர்.

அத்துடன் இவர், ஸமர்கந்து ஊரில் அழகான பெரிய பள்ளி வாசல் (மஸ்ஜித்) ஒன்றை நிர்மாணித்து வைத்தார். இப்போது ஸமர்கந்தில் ஜும்ஆ மஸ்ஜிதாக விளங்கிக் காட்சி யளிப்பது அதுவேயாகும்.

(2) மதீனாவில் வாழ்ந்திருந்த ஸஹாபி (நபித் தோழர்) களில் கடைசிப் பெரியாரான ஹஜ்ரத் ஸுஹைல் பின் ஸஅத் (ரலி) அவர்கள், இவ்வாண்டு இறந்து போனார்கள்.

(3) ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் பஷீர் (ரலி) அவர்கள் இவ்வாண்டு ஷாம் தேசத்தில், ஹமஸ் என்ற இடத்தில் இறந்து போனார்கள். ஷாமில் வாழ்ந்திறந்த ஸஹாபிகளில் இவர்கள் தான் கடைசியானவர்கள்.

## ஹிஜ்ரீ-89.

(1) இவ்வாண்டு ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு தஃலா (ரலி) ஹஜ்ரத் இப்ராஹீம் பின் அப்துர் ரஹ்மான் பின் அவுப் (ரலி), ஹஜ்ரத் ஸயீது பின் ஷுஜபு (ரலி) ஆகிய ஸஹாபாக்கள் வபாத்தாகி இறந்து போனார்கள்.

(2) இவ்வாண்டு அரபு முஸ்லிம்கள் கடல் கடந்து சென்று, முத்துவர்கிகா, மியூரக்கா என்ற தீவுகளைப் பிடித்து இஸ்லாமிய ஆட்சியை பரத்தினார்கள்.

## ஹிஜ்ரீ-90

இவ்வாண்டே வலீத் பின் பஜீத் பின் அப்துல் மலிக் என்பார் பிறந்தார். இப்பிள்ளையே பின்னர், ஹிஜ்ரீ 125-ல் பனி உமய்யாக்களின் 11-வது கலீபாவாக பட்டம் ஏறியவர்.

## ஹிஜ்ரீ-91.

(1) யஜீதுன் நாகிஸ் என்பார் பிறந்தது இவ்வாண்டு தான். இவர், வலீத் இப்னு அப்துல் மலிக் என்ற கலீபாவின் புதல்வர். இந்த யஜீது (நாகிஸ்) தான், பிறகு ஹிஜ்ரீ 126-ல் பனீஉமய்யாக்களில் தோன்றிய 12-வது கலீபாவாக இஸ்லாமிய குடியரசாட்சி புரிந்தவர்.

(2) ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள்இவ்வாண்டு மதீனா முனவ்வரா நகரில் பிறந்தார்கள்.

(3) தூரக்கிழக்கு நாடுகளான மதாயின், ஆஜர்பாய்ஜான் ஆகிய இடங்களிலுள்ள புராதனக் கோட்டைகளை, முஸ்லிம் வீரர்கள் இஸ்லாத்தின் பெயரால் பிடித்து ஜெயக்கொடி நாட்டினார்கள்.

(4) இவ்வாண்டு ஹஜ்ஜாஜ் பின் யூஸுப், இஸ்லாமிய சரித்திரத்திலேயே முதன் முதலாக உபைதுல்லாஹ் இப்னு ஸினான் என்ற வீரரை, இந்துஸ்தானின் பக்கம் (இப்போது பாக்கிஸ்தானின் தலைநகரா யிருக்கும் கராச்சிக்கு அருகே) அனுப்பி வைத்தார். ஆனால் உபைதுல்லாஹ் இப்னு ஸினான், இஸ்லாத்திற்காக வீரமரணமேற்று ஷஹீதாய் விட்டார்.

## ஹிஜ்ரீ-92.

இவ்வாண்டு, எகிப்து என்னும் மிஸ்ரின் அதிகாரியா யிருந்த மூஸா பின் நஸீர் என்பார், தாரிக் இப்னு ஜியாதை, இஸ்லாத்தின்

பெயரால் இஸ்பெயின் நாட்டுப் பக்கம் அனுப்பி வைத்தார். அப்போது தாரிக், தன்ஜா என்ற ஊரில் அதிகாரியாக இருந்தார். தாரிக் இப்னு ஜியாத் மகா வீரப்போர் தொடுத்து, சரித்திர ஏட்டில் முக்கியம் ஸ்தானம் பெற்று ஸ்பெயினை ஜெயித்தார். அது மட்டுமல்ல, அதன் பின் அவர் தன் வீரப்படையோடு போர்ச்சுகல் நாட்டுக் கரைப் பிரதேசங்களிலும் பல இடங்களில் சென்று இஸ்லாத்தின் கொடியை பறக்க விட்டார்.இந்த வெற்றிகளுக்கு அடையாளமாக அந்துலுஸ் நாட்டின் கரைப்பகுதியில், இஸ்லாத்தின் பெயரால் ஒரு அருங்கோட்டையை நிர்மாணித்து வைத்தார். அம்மலைக்கோட்டையின் பெயர் தான் இப்போதும் 'ஜபலுத் தாரிக்' என்று வழங்கி வருகிறது.

## ஹிஜ்ரீ-93.

(1) பதினேழே வயதுள்ள இளம் வாலிப வீரப் பிள்ளையாகிய முஹம்மத் பின் காஸிம் என்பவர், சரித்திரத்திலேயே ஓர் அரிய சாதனை கர்த்தராக விளங்கி, இந்துஸ்தானத்துக்குப் படையெடுத்து வந்து சிந்து மீது தாக்குதல் புரிந்தார். (சிந்து என்பது இப்போது பாக்கிஸ்தானிலுள்ள ஒரு மாகாணம்) இளைஞர் முஹம்மத் பின் காஸிம் அக்காலத்தில் சிந்துவை ஆண்டு கொண்டிருந்த ராஜா தாபிர் என்பானை எதிர்த்துப் போரிட்டு, புறமுதுகு காட்டி ஓடச் செய்ததோடு வாளுக்கு அவனை இரையாக்கிக் கொன்றும் போட்டார். மேலும் முஹம்மத் பின் காஸிம், சிந்துவில் இஸ்லாமிய ராஜ்யத்தை ஏற்படுத்தி விட்டு பஞ்சாபின் பக்கமும் படையெடுத்துப் போனார்.

(2) குராஸான் நாட்டு அதிபதியான கத்பிய்யா பின் ஸல்மா என்பார், இவ்வாண்டு இறந்து போய்விட்டார். இன்னவர் மங்கோலியா துர்க்கிஸ்தான், குராஸான் முதலிய தூர நாடுகளில் இஷா அத்துல் இஸ்லாம் செய்து சன்மார்க்கத்தைப் பரத்திவைத்தவர்.

(3) ஹஜ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) என்ற ஸஹாபியவர்கள், தமது 103 வது வயதில் பஸ்ரா என்ற நகரத்தில் இறந்து விட்டார்கள்.

**குறிப்பு:** அந்நாளில் இஸ்லாமிய உலகமெங்கும், பெரும்பாலும் எல்லா ஸஹாபாக்களும் இறந்து போய் இருந்தனர்; ஆனால் அபூ துபைல் ஆம்மா (ரலி) என்ற ஸஹாபியவர்கள் மட்டும் எஞ்சி உயிர் வாழ்ந்து வந்தார்கள். எனவே இதை ஸஹாபிகளுக்கு அடுத்த 'தாபிஈன் காலம்' என்று இஸ்லாமியச் சரிதையில் கூறப்படுகிறது.

(தொடரும்)

18060

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# பாத்திமா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரத்தில் ஹஜ்ரத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் மூஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், பால்யகால அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருக்கலியாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்த ஒழுங்கும், தனது பர்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகும், அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவன் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், ரஸூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின் பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின் பால் இருந்து வந்த பிரியமும், அவர்களின் நாணம், அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும் விபரமாய்க் கூறப்பட்டிருப்பதுடன் இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணர வேண்டியது மிக்க அவசியமாகும்.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1—8—0

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2–14—0

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

3/1

# அரைவிலை! அரைவிலை!!

## மனாயிகுல் அன்வார் பீ மதாயிஹுர் ரஸூல் வல் அப்ரார்.

இந்த கிதாபில், நமது நாட்டில் வழமையாய் ஓதி வருகிற ஸுபுஹான மௌலிது, பர்ஸஞ்சி மௌலிது, ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) மௌலிது, முஹியித்தீன் (ரலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (ரலி) மௌலிது ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸைய்யிதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, ஷபீஹுக பைத்து, கலாஸீ பைத்து, மழை பைத்து, பீஹுப்பி (ஸலவாத்து) பைத்து, கஸீதத்து ஹுஸைனிய்யா, அயாரப்பி பைத்து, ஜுத்பிலுத்பிக முனாஜாத்து, ஜிந்தா ஷாஹ் நூரிய்யா பைத்து, அபுல் ஹஸனிஷ் ஷாதிலீ (றஹ்) குத்பிய்யா, காஜா முயீனுத்தீன் (ரலி) பர்திய்யா, யாமன் யரா பைத்து, கல்வத்து நாயகம் பேரில் கஸீதா முதலியவையும் அடங்கியுள்ளன. இது பெரிய எழுத்தில் எழுதி, போட்டோ பிளாக் செய்து, கிளேஸ் காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6—0—0

ஷை கிதாபு ஒரே நேரத்தில் 6 வாங்கினால் அரைவிலையாக கொடுக்கப்படும். அதாவது ரூபா. 18–0–0க்கு 6 கிதாபுகள் கொடுக்கப்படும். இந்த சலுகை சொர்ப்ப காலத்திற்கே இருக்கும். இந்த சலுகை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் நிறுத்தப்படக்கூடும்.

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.